விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆடி 10 ஷவ்வா 4 இதழ் 163

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26—7—82


# சீன விமானக் கடத்தல் தோல்வியில் முடிந்தது

பீக்கிங், ஜூலை. 25

சீனுவிலிருந்து தாய்வானுக்கு விமானமொன்றைக் கடத்த எத்தனித்த ஐந்து சீன வாலிபர்கள் கொலலப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

ஷங்காயில் உள்நாட்டு விமான சேவையில் ஈடுபட்டுவந்த விமானத்தையே இவர்கள் கடத்த முயன்றதாகக் கூறப்பட்டது. இந்த விமானம் சோவியத்யூனியனில் தயாரிக்கப்பட்டதாம்

இவ்விமானக் கடத்தலை விமானத்தில் பிரயாணம் செய்த பிரயாணிகளும், விமான சிப்பந்திகளுமே முறியடித்தார்களாம்.

இவ்விமானக் கடத்த எத்தனித்த ஐந்து இளைஞர்களும் தாய்வானை நோக்கி விமானத்தைச் செலுத்துமாறு விமானியிடம் கோரிக்கைவிடுத்தனராம். இக்கடத்தல் முயற்சி பற்றி ஜப்பான் எச்சரித்திருக்கிறது.

## ஸெயில்சிங் பதவி ஏற்ருர்

(புதுடில்லி)

இந்தியாவின் ஏழாவது ஜனுதிபதியாக திரு. ஸெயில்சிங் ராஷ்டிரபதி பவனில் நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த சீக்கியரொருவர் இந்தியாவின் ஜனுதிபதியாக பதவியேற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும். [வெ]

### தேர்தலையொட்டி நடவடிக்கை:

# 5 ஆயிரம் பொலிஸார் உடனடியாக நியமனம்!

(கொழும்பு)

**தேர்தலுக்காக உடனடியாக 5000 பொலிஸார் புதிதாக நியமிக்கப்படவிருக்கிருர்கள். பாதுகாப்பு அமைச்சின் பணிப்பைத் தொடர்ந்து, புதிதாகப் பொலிஸாரை நியமிக்கப் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

புதியபொலிஸாரைத்தெரிவு செய்வதற்குப் பொலிஸ் நியமனக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. புதிதாக நியமிக்கப்படும் 5000 பொலிஸாரில் தமிழர்களும் இடம்பெறுவர். நாட்டிலுள்ள 690 வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்ற 20,000 பொலிஸார் தேவைப்படுகின்றனர். தற்போது 15,900 பொலிஸார் மட்டுமே சேவையிலுள்ளனர்.

## ரூபவாஹினியில் தமிழ்ப்படம்

[கொழும்பு]

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் மீண்டும் ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி முதல் தமிழ் திரைப்படம் காண்பிக்கப்படவிருக்கிறது.

'ஆகாயப்பந்தல்' என்ற தமிழ்ப்படமே, 6ம் திகதி இரவு காண்பிக்கப்படும்.

## சுவீப்முடிவுகள்

கண்டியில் நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 834வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

**24 H 0654**

ரூ. 1, 00, 000

இரண்டாவது பரிசு

**02 V 0939**

ரூ. 40, 000

மூன்ருவது பரிசு

**10 Y 0547**

ரூ. 10, 000

840 ரூபா கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 05 A 0799 | 06 A 0064 |
| 07 A 0408 | 19 A 0137 |
| 05 B 0836 | 06 B 0756 |
| 07 B 0281 | 11 B 0898 |
| 13 B 0914 | 15 B 0930 |
| 18 B 0259 | 22 B 0451 |

[8-ம் பக்கம் பார்க்க]

### நல்லூர் உற்சவம்:

# முதல் நாளிலேயே ரூ.24ஆயிரம்நகைகள்திருட்டு

[கோண்டாவில்]

நல்லூர் கொடியேற்றத்திருவிழா அன்று சுமார் 24,000 ரூபா பெறுமதிமிக்க நகைகள் கோவிலின் உள் வீதியில் களவு போய் உள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டரை பவுண் பெறுமதியான சங்கிலியும் கற்பூரம் விற்கும் இடத்தில் மூன்றரை பவுண் பெறுமதியான சங்கிலியும் கால் கழுவும் இடத்தில் 4 பவுண்பெறுமதியானசங்கிலியும் அறுத்தெடுக்கப்பட்டுள்ளது.

கடந்தவருட கொடியேற்றத்திருவிழாவன்று தாலிக்கொடியொன்று களவாடப்பட்டு, அதுஉடன் கடமையில் இருந்த முதலுதவிப்படையினரால் மீட்கப்பட்டது தெரிந்ததே. (வெ)

# நல்லூர் திருவிழாவில் ராணுவ-பொலிஸ் கூட்டு பாதுகாப்பு

## கொடியேற்றத்தில் திரளான மக்கள்

(கோண்டாவில்)

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இம்முறை பொலிசாரும் இராணுவத்தினரும் கடமையாற்றுகிருர்கள். இவர்கள் கோவில் பாதுகாப்பு கடவைகளிலும் வீதியின் வெளிப்புறத்திலும் கடமைபுரிகிருர்கள்.

இவர்களுடன் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையைச் சேர்ந்த நல்லூர், கொக்குவில் பிரிவினர் பிரிவு அத்தியட்சகர்களான திருவாளர்கள் தர்ம

[8-ம் பக்கம் பார்க்க]

### அரியாலைக் கலவரம்:

# 9 பேர் விழிப்புக்'குழு அமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் ஒ வார கால மாக நடைபெற்றுவந்த கோஷ்டிக்கலவரம் சுமுகமான நிலைக்க் கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் தி . இராசாவிசுவநாதன் தலைமையில் நேற்று யாழ் மாநகர சபை மண்டபத்தில் இது சம்பந்தமான மகாநாடு ஒன்று நடைபெற்றது,

## நிலைமை சுமுகம்

இம் மகாநாட்டில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் யாழ். பொலிஸ்தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரி திரு. சிவசம்பு தவலிங்கம் மற்றும் யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோரும் அரியாலையைச்சேர்ந்த பிரமுகர்

(8ம் பக்கம் பார்க்க)


உ

முருகா

யாழ்.நகர காஸ் குக்கர் பாவனையாளர்களே!

இதோ......எஸ். சரவணபவன்

**லங்கா பில்லிங் ஸ்ரேசன்**

(Lanka Filling Station)

113, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8204

உங்கள் காஸ் சிலிண்டர் (L. P. Gas) தேவையை உடன் பூர்த்தி செய்ய எம்மை நாடுங்கள்.

★ விடுமுறை நாட்கள் உட்பட

★ 24 மணி நேரமும் எமது சேவை உண்டு.

புதிய சிலிண்டர் டிபொசிற் - ரூபா 750-00

13 கிலோ காஸ் விலை - ரூபா 116-00

3992


# பெய்ரூட்மீது இஸ்ரேல் குண்டுவீச்சு

## இஸ்ரேல் விமானமும் சுடப்பட்டதாம்

பெய்ரூட், ஜூலை. 25

மேற்கு பெய்ரூட் பகுதியை இஸ்ரேலிய விமானங்கள் நேற்று மூன்ருவது தினமாக குண்டுவீசித்தாக்கியதாக அறிவிக்கப்பட்டது,

பெக்கா பள்ளத்தாக்கில் காணப்பட்ட இஸ்ரேலிய ஜெட் விமானமொன்றை சுட்டு வீழ்த்தியதாக சிரியா தெரிவித்தது.

பெய்ரூட் நகரின் தென்பகுதியில் இஸ்ரேலியவிமானங்கள் தொடர்ந்து குண்டுவீசித் தாக்குதல்நடத்திவருவதாகக்கூறப்பட்டது. (வெ


## சுங்க ஏலவிற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 28-7-82 காலை பத்து மணி தொடக்கம் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். விற்பனையின் முழுநிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மேமாதம் 28ம் திகதி வெளியிடப்பட்ட 10675ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1-ம் பிரிவு ில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. இந்தியாச் சேலைகள்
2. கால் சட்டைத் துணிகள்
3. பாவனைக்குதவாத வெளியிணைப்பு மோட்டார் இயந்திரங்கள்.

எஸ். எம். ஜே. சேனரத்ன,
சுங்க சேகரிப்பாளருக்காக,
யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1982-07-22.

3985

# வரி விளம்பரம்

## தேவை

உலோகத் தகட்டு வேலையில் அனுபவமுள்ளவர்கள் உடனே தேவை. இரும்பு அலுமாரிகள், கபினெற்றுகள் செய்வதில் அனுபவமுள்ளோர் விரும்பப்படுவர். ஏற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்குக. விளம்பர இல. 979, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (3979

வான் சாரதி–நடுத்தர வயதுள்ளவரும் வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலைகளில் உதவி செய்யக்கூடிய குடிப்பழக்கமில்லாதவர்களுமே நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3972

Refrigerator Technicians குளிர்சாதனப்பெட்டி மெக்கானிக்குகள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும், பெயின்ற் அடிப்பதிலும் நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாகச் சேவைசெய்தால் உற்பத்திச்சாலையில் பயிற்சி அளிப்பதற்குக்கூட ஒழுங்கு செய்யப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து, நற்சான்றிதழ்களுடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3973

வீடு கட்டுவதற்கு 1½ — 2 பரப்புக் காணி கொக்குவில், கோண்டாவில், இணுவில், மருதனைமடம் பகுதியில் கே. கே. எஸ். வீதிக்கு அருகாமையில் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும் (பணம் உடன் செலுத்தப்படும்) K. N. S. ஈஸ்வரன், 199/5, கில்னர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம. (3978)

பிளாஸ்ரிக்கினால் கதிரை பின்னக்கூடியவர்கள் தேவை. நல்ல வருமானமும் தொடர்ச்சியான வேலையும் உண்டு. உடனே விண்ணப்பிக்கவும். விளம்பர இல.3980, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (3980)

என்ஜினியரிங்தொழிற்சாலையில் வேலை செய்ய உதவியாளர்கள் தேவை. அனுபவமுள்ளோரும், அனுபவமற்றோரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 3981, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (3981)

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத புனரமைக்கப்பெற்ற Isuzu–ELF150 15 சீற் கைறூவ் 1979 மொடல் வானும் C/90 ஹொண்டா மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3930

கோண்டாவில் பலாலி வீதி அண்மையில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சிவகஸ்தூரி, கோண்டாவில் வடக்கு. (C. T. B. டிப்போ அருகாமை 5-ம் கிலோமீட்டர் எல்லை ஒழுங்கை) (3990)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பயிற்சி

றேடியோ–டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங், Hotel Management, மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம் 30–07–82. அனைவரும் சேரலாம். நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3970

## பாடசாலை தரமுயர்வு

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் மேற்கு சைவத் தமிழ்க்கலவன் பாடசாலை, நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் முயற்சியை அடுத்து மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சபையினதும் ஊர்மக்களதும் நீண்டநாள் கோரிக்கை இதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாண்டு மேற்படி பாடசாலை அபிவிருத்திசபையினர் தாம் கொண்டாடவுள்ள பாடசாலைஸ்தாபக நூற்றாண்டு விழாவில் கோரிக்கையை நிறைவேற்றிய எம். பிக்கும் பாராட்டு விழா நடாத்தவுள்ளனர். [க]

கலவரம் நடந்த இடங்களுக்கு

# அரச அதிபர், நகரமுதல்வர் பிரமுகர்கள் விஜயம்

## அமைதியை ஏற்படுத்த தீவிர ஏற்பாடு

(அரியாலை)

கோஷ்டிச்சண்டையாக ஆரம்பித்து சாதிச்சண்டையாக உருவெடுத்திருக்கும் அரியாலை கலைமகள் வட்டாரப் பகுதிகளுக்கு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபைச்செயலாளரும், யாழ்ப்பாண அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையாவும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு சபாபதியும், கடந்த சனிக்கிழமை இரவு நேரில் விஜயஞ் செய்து பார்வையிட்டனர்.

அரியாலை மேற்கு கிராம சேவையாளர் திரு மயில்வாகனம் இவர்களைச் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அழைத்துச் சென்று காட்டினர். கலவரங்கள் காரணமாக தமது தொழில் துறைகளுக்குப்போக முடியாமல் இருக்கும் மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தனர்.

இப்பகுதி மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிமடுத்த அரசாங்க அதிபர் பொலிசாரோடு தொடர்பு கொண்டு பலத்த பாதுகாப்பை இப்பகுதிக்கு உடன் ஏற்படுத்த ஆவன செய்வதாகவும், சம்பந்தப்பட்டவர்களையும், இப்பகுதிப் பிரமுகர்களையும் அழைத்து உயர்மட்டத்திலான சமாதான மகாநாடொன்றை நடாத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும் உறுதியளித்தார்.

இப்பகுதியில் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் முன்னாள் பாராளுமன்ற நியமன அங்கத்தவரான திரு. எம். சி. சுப்பிரமணியமும் இக் கோஷ்டியுடன் சென்று இப் பகுதியிலுள்ள முக்கிய பிரமுகர்களைக்கண்டு சமாதான முயற்சிகளை ஏற்படுத்தும்வழிவகைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் சனிக்கிழமை மாலை இப்பகுதிக்கு விஜயஞ் செய்த குழுவினர் இப்பகுதியில் நிரந்தர சமாதானமொன்றை ஏற்படுத்த பல முயற்சிகளைக் கைக்கொண்டதுடன் சம்பந்தப்பட்டவர்களையும் கண்டு பேசினர்.

சனிக்கிழமை இரவு எதுவிதமான அசம்பாவிதங்களும் இப் பகுதியில் நடைபெறாமல் பொலிஸார் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.


## அறிவித்தல்

செல்வரட்ணம், ஸ்ரீஸ்கந்தரட்ணம் [ஸ்ரீ] ஆகிய நான் 01–07–82 தொடக்கம் ''கன்ராபியா மோட்டோர்ஸ்'' ஸ்தாபனத்தின் மெக்கானிக் பதவியிலிருந்து விலகிவிட்டேன் என்பதையும் அங்கு எனது பெயரால் நடத்தப்படும் வேலைகளுக்கு நான் பொறுப்பல்ல என்பதையும் இத்தால் அறியத்தருகிறேன். இனி மேல் என்னுடன் தொடர்பு கொள்ளும் விலாசம்:

**ஸ்ரீஸ் மோட்டோ வேக்ஸ்**

57, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

3989

**சிசில் குளிர் சாதனப் பெட்டிகள்**
**SISIL REFRIGERATORS**

★ 6, 8 கன அடிப்பெட்டிகள் (சாதாரணம் அன்ட் டிலுக்ஸ் மொடல்கள்) மிக சொற்ப தொகையே கையிருப்பில் உள்ளதால் உங்கள் தேவைக்கு உடனே முந்துங்கள்.
★ ஒரு வருட உத்தரவாதம் உள்ளது. எல்லா உப உறுப்புகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
★ சகல விதமான பிழைகளை திருத்துவதும், பெயின்ற் அடித்தும் தாமதமில்லாமல் செய்து கொடுக்கப்படும்.

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.**

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 234

**ரஸ்ற்ரவல் சேவிஸ்**
**(Trust Travel Service)**
**AEROFLOT விமானத்திற்கான**
டிக்கட்டுகளை குறைந்த செலவில்
உடனுக்குடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கொழும்பு | பிராக் | ரூ. 8700-00 |
| கொழும்பு | லண்டன் | ரூ. 7700-00 |
| கொழும்பு | கராச்சி | ரூ. 2750-00 |
| கொழும்பு | சிங்கப்பூர் | ரூ. 6500-00 |

(இருவழி ரிக்கட்)

★ PASSENGER SALES AGENT FOR AEROFLOT ★

சகல ரவல் ஏஜன்சிகளும்
**Aeroflot விமானத்திற்கான**
டிக்கட்டுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட கமிஷன் வழங்கப்படும்.
★ விசா (VISA) கள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படும்.

**ரஸ்ற்ரவல் சேவிஸ்**

தலைமையகம்: HIRDRAMANI ARCADE, 65, Chatham Street. Colombo 1, தொலைபேசி: 548409 அன்ட் 548811

கிளை: 11 A, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8111

(3988)


# இன்றைய பலன்

ஆடி மாதம் 10-ம் திகதி
திங்கட்கிழமை
(26—7—82)

மேடம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்றுஇன்று அம்பலமாகலாம். சிலருக்கு விரக்தி மனப்பான்மை தென்படும். பொறுமையுடன் நடப்பது நன்று.

இடபம்; பொதுத்துறையில் நாட்டம் ஏற்படும். சிலர் தேர்தல் ஜுரத்தாலும் பீடிக்கப்படலாம். பிதாவழியின் மூலம் ஆதரவுக்கு இடமுண்டு. வாழ்க்கையை அமைப்பதில் மகிழ்ச்சியடைவீர்கள்.

மிதுனம்: புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு, புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருப்பப்படலாம். பண பலமும் உண்டு.

கடகம்: வணிகத்துறையில் புதிய வாய்ப்புகள் ஏற்படும். சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். பொது மக்களின் ஆதரவும் கிடைக்கும்.

சிங்கம்: சிந்தனை புதிர் போடும். சீறிவரும் கோபம் பெரியவர்களை பகைத்துக் கொள்ள நேரிடலாம். தொழில் துறையில் புதிய கவலைகள் தோன்றக்கூடும். அவதானம் வேண்டும்.

கன்னி: கண்துடைப்புவேலைகளால் நலிவுக்கு இடமேற்படும். உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம். குடும்பத்தில் சிறு பூசல் தோன்றிமறையும். உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

துலாம்: இல்லத்தில்இனிமையான நிகழ்ச்சி இடம்பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். நீண்ட நாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும். நல்லதினம்.

விருச்சிகம்: ஆத்திரப்படுவதன்மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக்கூடும். அயலவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளவும்,

தனு: இலாபகரமானதொழிலில் முதலீடு செய்வீர்கள். வாகன சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும். தாய் வழியால் தனவரவுக்கும் இடமுண்டு, மகிழ்ச்சிகரமான தினம்.

மகரம்: அறவழியில் நாட்டம் செல்லும். வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும். இரக்க சிந்தனையின் மூலம் பொருட் செலவுண்டு. கற்றமனிதர்களின் வாழ்த்து கண்டிப்பாக கிடைக்கும்.

கும்பம்: வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். சிக்கலான பிரச்னைகளை இன்று தள்ளிவைப்பது விரும்பத்தக்கது. பெரியவர்களுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்

மீனம்; இல்லத்தில் இனிமை தவழும். வெளியிடத்து தொடர்புகள் பெருகும் இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கு உயரும். நல்லதினம்.

சோதிடகலாநிதி
திருமலை
கு. வேலுப்பிள்ளை

## வட்டு.எம்.பி.க்கு சுகவீனம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. தா். திருநாவுக்கரசு சுகவீனமுற்று காங்கேசன்துறையிலுள்ள தமது இல்லத்தில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றார்.

செங்கமாரி நோய் காரணமாக சிகிச்சை பெற்றுவரும் திரு. திருநாவுக்கரசு கடந்த ஒரு வாரகாலமாக தமது பொது நிகழ்ச்சிகளை ரத்துச் செய்துள்ளார். [வெ]

## வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கொடியேற்றம்

யாழ்ப்பாணக்குடாநாட்டின் தீவுப்பற்றிலே கேந்திர ஸ்தானமாக விளங்கும் வேலணைக் கிராமத்தின் மத்தியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன ஒருங்கே அமையப் பெற்று விளங்குகின்றது பெருங்குளத்து முத்துமாரி அம்மன் ஆலயம். இது அநேகராலும் தெரிந்துகொள்ளப்பட்ட மிகப்புராதன அம்மன் கோவில்களில் ஒன்று.

இச்சரித்திரப்பிரசித்தி பெற்ற ஆலயத்தின் வருடாந்தமகோற்சவம் 26–7–82ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. இதனைத் தொடர்ந்து தினமும் திருவிழாக்கள் நடைபெற்று 10–ம் நாள் தேர்த்திருவிழாவும். தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுவதுடன் 11–ம் நாள் பூங்காவனத் திருவிழாவுடன் மகோற்சவம் பூர்த்தியடையும்.

ஆ. அருமைநாயகம்

## ஜப்பான் மண்சரிவு, வெள்ளப் பெருக்கு:

# இறந்தோர் தொகை 140 ஆக உயர்வு!

## 30,000 பேர் வீடிழப்பு!

### 200 பேரைக் காணவில்லை

டோக்கியோ ஜூலை 25 ஜப்பானின் 'நாகசாகி' நகரில் ஏற்பட்ட மண்சரிவு வெள்ளப்பெருக்கு ஆகியனவற்ருல் இறந்தவர்களின் எண்ணிக்கை 140 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் ஆரம்பமான கடும் மழை தொடர்ந்தும் பெய்துவருவதால் பலத்த வெள்ளப்பெருக்குடன் மேலும் பல மண்சரிவுகளும் ஏற்பட்டவண்ணமேயிருக்கின்றன.

பலவீடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருப்பதனுல் 30,000 மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

200 பேர்வரை காணுமல் போய் விட்டனரென்றும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மண்சரிவுகளுக்குள் சிக்குண்டு மிகவும் அடியில் புதையுண்டிருக்கலாம என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். [கி]

## இஸ்ரேலிய ஜெட்விமானம் சிரியாவால் சுடப்பட்டது!

பெய்ரூட், ஜூலை. 25 இஸ்ரேலிய ஜெட்போர் விமானமொன்றுசிரியாப்படைகளினுல் சுட்டுவீழ்த்தப்பட்டது சிரியாவின் தென்பகுதி 'பெக்கா' பள்ளத்தாக்கில் நிலைகொண்டிருந்த சிரியாத் துருப்புக்கள் மீது தாக்குதலை நடத்தியபோதே இவ்விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது.

கடந்த மூன்று தினங்களாக பெய்ரூட்டின் சுற்றுப்புறங்களில் கடும் தாக்குதல்களை பாலஸ்தீன–இஸ்ரேல்படைகள் பரஸ்பரம் மேற்கொண்டுவருகின்றன.

### 200 பேர் பலி

மேற்கு பெய்ரூட்டின் தென்பகுதியில் நேற்று நடந்தசமரில் சுமார் 51பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் அல்லாது காயப்பட்டிருக்கலாமென்றும், மொத்தமாககடந்த மூன்று நாள்போரில் 200 பேர் வரை பலியாகியுள்ளனரென்றும் பாலஸ்தீன விடுதலைஇயக்கம் அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, சமாதானப்பேச்சுவார்த்தைகளை நடத்திவரும் அமெரிக்க அதிபர் திரு. றீகனின் விசேட பிரதிநிதியான திரு. பிலிப் ஹபிப், சவுதியில் நடத்திய பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு இஸ்ரேல் சென்றுள்ளார். [கி–இ]

## பீரங்கி யுத்தம் 100 பேர் பலி!

பெய்ரூட் ஜூலை 24 மேற்கு பெய்ரூட்டில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பாலஸ்தீனியப் படைகளுக்கு மிடையே நேற்று கடும் பீரங்கிச்சண்டை இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய விமானங்களின் குண்டு வீச்சிற்கு நூற்றுக்கும் அதிகமானவர்கள் பலியானதாகவும் பாலஸ்தீனிய வட்டாரங்கள் தெரிவித்தன. [வெ]

## இந்திரா அமெரிக்காவில் ஆயுத கொள்வனவு பேச்சு நடத்தார்

### பத்திரிகைச்செய்திக்கு மறுப்பு

புதுடில்லி ஜூலை 25 இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது அமெரிக்க விஜயத்தின் போது இந்தியாவுக்கு அமெரிக்க இராணுவ சாதனங்களைக் கொள்வனவு செய்வது குறித்து வாஷிங்டன் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவாரென்ற செய்தியை புதுடில்லியில் இந்திய உயர் அதிகாரியொருவர் மறுத்துள்ளார்.

வாஷிங்டன் பத்திரிகையொன்று மேற்கண்ட தகவலை வெளியிட்டிருந்ததென்றும் ஆனுல் பிரதமர் ஆயுதக்கொள்வனவு பற்றி அமெரிக்கர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தமாட்டார் என்றும் தெரிவித்த அந்த அதிகாரி பிரதமரின் இவ்விஜயம் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே மேம்பட்ட பரிந்துணர்வை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றதென்றும் கூறினுர்.

இந்தியப்பிரதமரின் அமெ அமெரிக்க விஜயம் குறித்து அமெரிக்க ராஜங்க அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் திருமதி காந்தியின் இவ்விஜயம் இந்திய அமெரிக்க உறவை மேலும் வலுவாக்குமெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி வழங்குவது இந்தயாவை எதிர்ப்பதற்கல்ல என்றும் தெரிவித்தார். [கி]

## ✯ பருத்தித்துறையில்

## ரூ. 10 லட்சம் செலவில் பொது நூல்நிலையம்

(புலோலி)

பருத்தித்துறையில் 10 லட்சம் ரூபா செலவில் மாடிப் பொது நூல்நிலையமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதென்று பருத்தித்துறை நகர முதல்வர் சட்டத்தரணி எம். வேலும் மயிலும் தெரிவித்துள்ளார்.

நகராளுமன்ற அலுவலகத்திற்கு அருகில் உள்ள காணியில் இப்பொது நூல் நிலையத்தை நிர்மாணிப்பதென முன்னர் தீர்மானிக்கப்பட்டு நான்கு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும பின்னர் அத்திட்டம் செயற்படுத்தப்படாமல் இருந்தது என்றும் தற்போது இத்திட்டத்தை மீளாய்வு செய்து புதிய மதிப்பீட்டின்படி 10 லட்சம் ரூபா செலவில் புதிய பொதுநூல் நிலையத் நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் முன்னர் பருத்தித்துறை மின்சார நிலையம் இயங்கி வந்த காணியிலேயே இந்நூல் நிலையம் அமையுமென்றும் இந்நவீன மாடிக் கட்டிட நூல் நிலையத்தை அமைப்பதற்கென பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் 60,000 ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளாரெனவும்மிகுதிப்பணத்தை விசேட நன்கொடையாக வழங்குவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் வாக்குறுதியளித்துள்ளாரெனவும் நகராளுமன்றத் தலைவர் வேலும் மயிலும் தெரிவித்தார்.

இப்பொது நூல்நிலையம் கலை, விஞ்ஞான ஆய்வுகூடங்கள் பெண்கள் பகுதி சிறுவர் பகுதி கேட்போர்கூடம் போன்ற பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கும் என்றும் இப்பொழுது நூல்நிலையக்கட்டிட நிதிக்காக திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இலங்கை வங்கிப் பருத்தித்துறைக் கிளையில் தனிக்கணக்கொன்று திறந்து வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது பருத்தித்துறை தும்பளை வீதியில் சிவன் கோவிலடியில் நகரசபையால் நிர்வகிக்கப்பட்டுவரும் மயில் வாகனம் பொதுசன நூல் நிலையம் எதுகாரணம் கொண்டும் மூடப்படமாட்டாதென்றும் தொடர்ந்தும் இயங்கி வரும் என்றும் நகர முதல்வர் உறுதியளித்தார்.

## குருநகர் தொடர்மாடிவீடுகள்

### விரைவில் மக்களுக்கு கையளிக்கப்படும்

### "யோகேஸ்வரபுரம்" என பெயரிட ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

குருநகரில் மக்கள் குடியிருப்புக்கென கட்டி முடிக்கப்பட்டுள்ள 160 வீடுகளைக் கொண்ட மாடிக்கட்டிடம் அமைந்துள்ள பகுதிக்கு 'யோகேஸ்வரபுரம்' எனப் பெயரிடப்படவுள்ளது.

குருநகரில் மக்கள் குடியிருப்புக்கென ஒதுக்கப்பட்ட காணியை அரசு சுவீகரித்து படையினருக்கானவாசஸ்தலங்களையும், காரியாலயத்தையும் அமைப்பதற்கென நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் குருநகர் மக்களும் யாழ். மாநகரசபையும், இக்காணியை மீட்டுத்தருமாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனிடம்வற்புறுத்தி வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கு செவிமடுத்து யாழ். எம்.பி மீண்டும் அக்காணியை அரசாங்கத்திடமிருந்து பெற்று சகலவசதிகளும்கொண்ட மாடி வீடுகளை நிர்மாணிக்க வசதிகள் செய்திருந்தார். அவர் எடுத்த முயற்சிகளின் பலனுவே இவ் வீட்டுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது என்று கருதிய பொதுமக்கள் பலர் அப்பகுதிக்கு 'யோகேஸ்வரபுரம்' என்று பெயரிடுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக யாழ். மாநகர துணைமுதல்வர் திரு. ம. அலோசியஸ் இம்மாதம் 30–ம் திகதி நடைபெறவிருக்கும் யாழ்.மாநகராட்சிமன்றப் பொதுக்கூட்டத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இத்திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் வெகுவிரைவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. மேலும் இங்கு நிர்மாணிக்கப்பட்டுவரும் வரவேற்பு மண்டபத்துக்கான வேலைகளை விரைவில் செய்து முடிப்பதற்கு கட்டிடத்திணைக்கள பொறியியலாளர் திரு. வி. நந்தீஸ்வரர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். [மா]

## நஞ்சுகுடித்ததாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாராம்!

# வவுனியாவில் 16 வயது இளைஞர்படுகொலை!

## ஒருவர் கைது; மற்றொருவரை பொலிஸ் தேடுகிறது

(வவனியா)

நச்சுத்திராவகம் அருந்தியதாக வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 16 வயது இளைஞர் ஒருவர் ஆஸ்பத்திரியிலேயே மரணமானுர். இம்மரணம் ஒரு கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

இச்சம்பவம் வவனியா பொலிஸ் பிரிவிலுள்ள பாலமோட்டை பூவரசன்குளத்தில் இடம்பெற்றது.

செல்லையா கனகன் என்ற 16 வய இளைஞரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது இது குறித்து தெரியவந்துள்ளதாவது:

இறந்தவர் நஞ்சுகுடித்துவிட்டார் என கே. சண்முகநாதன் என்பவர் வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளார்.

மரணமாகியவர் வீரகத்தி என்பவரின் தோட்டத்தில் வேலைசெய்கின்ற ஒரு தொழிலாளி. சம்பவதினத்துக்கு 3 நாளுக்கு முன்பு வீரகத்தி என்பவருக்கு சொந்தமான சைக்கிளை இறந்தவர் களவெடுத்ததாகவும், வீரகத்தியும் சிவஞானம் என்பவரும் இறந்த கனகனைப் பலமாகத் தாக்கினுர்கள் என்றும் பின்னர் சைக்கிள் மீட்கப்பட்டது. என்றும் இறந்தவரின் நெஞ்சில் பலத்த அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் ஆஸ்பத்திரியில் சேர்ந்தவுடன் இறந்துவிட்டார் என்றும் தெரியவந்துள்ளது.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை வவனியா மாவட்ட பதில் நீதிபதி ஆர். வில்வராசா நடத்தினுர்.

வவனியா பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சிறி. இராஜேஸ்வரன் பிரேத பரிசோதனையின் பின் தனது அறிக்கையில் இறந்தவர் நஞ்சு குடித்ததனுல் மரணமாகவில்லை என்றும் பிடரிப்பக்கத்தில் ஏற்பட்டதாக்கம் காரணமாகவே இறந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

இறுதியில் மரண விசாரணை அதிகாரி கொலை என தீர்ப்பளித்தார்.

இதுதொடர்பாக சந்தேகத்தின்பேரில் வீரகத்தியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சிவஞானத்தைதேடுகின்றனர்.

குற்றவியல் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. ஆர். கிருஷ்ணராசா விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (இ)

## இரு போட்டிகளில் முதலிடம் பெற்றுர்

[யாழ்ப்பாணம்]

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் குமரேஷ் ஷயந்தனு யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஆங்கில வாசிப்பு, ஆங்கில பேச்சு போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ் கல்வி வட்டார ரீதியிலேயே இப்போட்டிகள் நடத்தப்பட்டன. நாடகப்போட்டியிலும் சென். ஜோன்ஸ் கல்லூரியே முதலிடம் பெற்றிருந்தது.

முதலிடம்பெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி நாடகத்தில் செல்வன் குமரேஷ் ஷயந்தனு முக்கியபாத்திரத்தில் தோன்றியிருந்தார்.

செல்வன் குமரேஷ் ஷயந்தனு நல்லூர் கந்தசுவாமி கோவில் பரிபாலகர் திரு. குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் புதல்வராவர். (கி)

## நிலையம் பனம்பொருள்

(புலோலி)

பனம்பொருள் அபிவிருந்திச் சபை நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடமகோற்சவத்தையொட்டி அங்கு சிறப்பு விற்பனை நிலையமொன்றை அமைக்கவுள்ளது.

### மணிவாக்கு

நாம் எல்லோரும் திருவடி யாத்திரைக்காரர்; எனவே எல்லோரும் ஒருவரோடொருவர் நீதியாகவும், அன்பாயும் வாழுதல் வேண்டும்.

— சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்

# நமது நோக்கு

## ஜனுதிபதி தேர்தலும் தமிழ் வேட்பாளரும்

நடைபெறவிருக்கும் ஜனுதிபதி தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிடுவதானது தமிழ்ப்பேசும் மக்களின் எதிர்கால அபிலாஷைகளுக்கு உகந்ததாக இருக்குமா அல்லது அவர்களின் இன்றைய நிலைமையை மேலும் மோசமாக்குவதாக அமையுமா?

தமிழ் மக்களும் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளும் நன்கு அலசி ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டிய ஒரு முக்கிய கேள்வி இது.

ஜனுதிபதி தேர்தலில் தமக்கு எதுவித அக்கறையும் இல்லையென்று முன்பே அறிவித்துள்ளது தமிழர் விடுதலைக் கூட்டணி. இத்தீர்மானத்தை திரும்பவும் பரிசீலனை செய்யும்படி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிருர்.

ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடவேண்டும் என்ற கருத்து அ. இ. த. காங்கிரஸ்கட்சியை சேர்ந்த முக்கியஸ்தர்கள் மத்தியில் ஏற்கனவே இருந்து வருவது தெரிந்த விடயம். இது பற்றி அண்மையில் கூடிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டுள்ளது. தமிழ் மகன் ஒருவர் கட்டாயமாகப்போட்டியிட வேண்டுமென்ற கருத்து இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாகவும் இறுதி முடிவு எடுப்பது ஆகஸ்ட் மாதத்துக்கு ஒத்திப்போடப்பட்டதாகவும் செய்தி கூறுகிறது.

ஜனுதிபதி தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடுவதால் முழு இலங்கையிலும் வாழும் தமிழ்பேசும் மக்களின் பலத்தைக்காட்ட ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைக்கும் என்பது திரு. பொன்னம்பலத்தின் வாதம். இந்த அரசு தமிழரின் சம்மதம் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ளதா என்பதற்கு விடையளிக்கவும்தமிழ்தேசியஇனம் இன்றையஅரசியல் யாப்பை முற்ருக நிராகரிக்கிறது என்பதைக் காட்டுவதற்கும் இது ஒரு அரிய சந்தர்ப்பமாக அமையும் என்றும் அவர் கருதுகின்ருர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றைய அரசியல் யாப்பமைப்பு விவகாரங்களில் கலந்துகொள்ளாததுடன், அண்மையில் அவ்யாப்பில் செய்யப்பட்ட திருத்தங்கள் தொடர்பான விவாதத்திலும்கூட பங்கேற்கவில்லை. இந்த யாப்பின் பிரகாரம் நடைபெறும் ஜனுதிபதித் தேர்தலில் இக்கட்சி போட்டியிடுவது பொருத்தமாகுமா என்பது ஒரு ரசமுள்ள கேள்வியே! ஆனுல் அதே யாப்பின்கீழ் நடைபெறும் பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு பாராளுமன்றம் சென்று அரசியல் யாப்புக்கு விசுவாசம் தெரிவித்து பதவி ஏற்பது மட்டும் எங்ஙனம் பொருத்தமாகும் என்று கேட்பதிலும்அர்த்தமுண்டு. இருந்தாலும் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் என்று வரும்போது தமிழ்பேசும் மக்கள் தங்கள் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் விதத்தில் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்கும் அவ்வாறு தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள் ஒன்ருக இணைந்து செயற்படுவதற்கும் வாய்ப்பிருக்கின்றது.

ஜனுதிபதி தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிட்டு வெற்றிபெறும் வாய்ப்பே இல்லை.

தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்கும், அரசியல் யாப்பை ஏற்றுக்கொள்ளவில்லையென்பதைக் காட்டுவதற்கும் மாத்திரம் இந்தத்தேர்தலிற் போட்டியிடுவதென்பது இன்றைய நிலையில் அவசியம்தானு?

கட்சிசார்பற்ற முறையில் தமிழ்மகன் ஒருவர்போட்டியிடுவதானுலும் கூட அது தமிழ்பேசும் மக்களின் எதிர்கால நலன்களுக்குப் பயன்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

அப்படியான ஒரு வேட்பாளருக்கு மலையகத்தில் வாழும் தமிழ்பேசும் மக்கள் அனைவருமே வாக்களிப்பார்கள் என்பதும சாத்தியமில்லை.

இந்திய வம்சாவளியினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் இ. தொ. காங்கிரஸ், ஐ. தே. கட்சியுடன் இணைந்துள்ளது. இன்னெரு பிரிவான ஜனநாயக காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச்சார்ந்திருக்கிறது. தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் இவ்வாறே சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளை ஆதரிக்கும் நிலையில் இருக்கிருர்கள். கிழக்கிலங்கையின் அரசியல் சூழ்நிலை தெளிவற்றுக் காணப்படுகிறது.

இந்த நிலைமையில் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் ஒரு தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிடுவது தமிழ்பேசும் மக்களுக்கு நன்மை தருமா? திரு. பொன்னம்பலம் கூறும் கருத்தாகிலும் நிறைவேறுமா என்று ஆலோசிப்பது அவசியம்.

எப்படியோ ஒரு சிங்கள மகனே ஜனுதிபதித் தேர்தலில் வெற்றிபெறப் போகிருர் என்பது உறுதி!

அவ்வாருன வேட்பாளர்களில் தமிழர் நலன்களுக்கு உதவக் கூடியவர் அல்லது தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றுபவர் யார் என்பது பற்றி ஆலோசிப்பதும் அவரைஆதரிப்பது பொருத்தமாய் இருக்கும் என்றுநாம் கருதுகினேேம.

எவ்வாருயினும் ஜனுதிபதித் தேர்தல் விரைவில் வரவிருப்பதால் தமிழ்க் கட்சிகளும தமிழர் நலனில் அக்கறையுள்ள ஏனையஸ்தாபனங்களும இந்தவிவகாரம் குறித்து அலசி ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டிய கட்டத்தில் இருக்கிருர்கள்.

### இன்று சைவப்பெரியார் குருபூசை

# சிவாகமங்களை முறையாகக் கற்று அதன்படி ஒழுகியவர்

சென்னை உயர் திரு- செ. வே. ஐம்புலிங்கம்பிள்ளை

சைவப்பெரியார்புலோலி ஸ்ரீமத் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை சிவபக்தியிற் சிறந்தவர். இவர் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கோயில்வழிபாடு செய்யாமல் உணவுகொள்ளார். எப்போதும் சிவனடியே சிந்திக்கப் பெற்றவர். மறந்தும் புறந்தொழாமாண்பினர். வெள்ளிக்கிழமைதோறும் உபவாசமிருப்பவர். வைதிக சைவசிகாமணியாய்த் துலங்கியவர்.

சைவசித்தாந்த சாத்திரங்களையும் சிவாகமங்களையும் முறையாகப் படித்து தேர்ச்சியடைந்தவர்; அவற்றின்படி ஒழுகியவர். நேர்மையிற் சிறந்தவர்; கூர்மையான அறிவுடையவர். புகழ்ச்சியையும் பொருளையும் விரும்பாதவர். சைவசமயத்தின் தத்துவங்களை எவரும் எளிதில் விளங்கிக் கொள்ளும்படி பல புத்தகங்களை வெளியிட்டவர். இவர் எழுதிய புத்தகங்களின் உரிமையையெல்லாம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கும் கொழும்பு விவேகானந்த சபையினருக்கும் அளித்துள்ளார்.

சைவசமயத்தின் உண்மைகளையும் மேன்மைகளையும் ஆங்கிலத்தில் பரப்பிய மூன்று பேரறிஞர்களில் இவருமொருவராவர். மற்ற இருவர் நல்லசாமிப்பிள்ளையும், குகதாசர் சபாரத்தின முதலியாருமாவர். இவருக்குப் பின் எவருமிலர் எனலாம்.

இவருடைய மிகப்புகழ் பெற்ற ஆங்கில நூல் "The Saiva School of Hinduism" அகில உலகிலுமே பெருநூலாக வரவேற்கப்பட்டது.

இப்பெரியார் ஆடி மாதம், அத்த நட்சத்திரம் கூடிய (14-8-1953) ல் சிவபதமடைந்தனர். யாம் இவருக்குச்செய்ய வேண்டியகடமைஎன்னெனின் இவர் குணங்களையும் செயல்களையும் பின்பற்றி வைதிக சைவசமயத்தை முறையாகப் பரப்புவதேயாம்.

"பொய்யன்பிலா அடித்
தொண்டர்க்குத்
தொண்டராம்
புண்ணியமே"

## சைவப் பெரியார் இன்றிருந்தால்!

### (பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம்)

26-7-82 பெரியாரின் குருபூசை என்ற நினைவுடன் கண்ணயர்ந்தேன். நீறணிந்தஅழகு பொலி நெற்றி, அன்பு பொழி கண்கள், வெள்ளை வேட்டி, வெள்ளைப் போர்வை – இவற்ருேடு சிவம்பொலியக் காட்சி அளித்தார் சிவபாதசுந்தரனுர். "அப்பா" என்று கால்தொட்டு வணங்க ஆசீர்வாதம் செய்தார். "எப்படி சைவத் தொண்டு" என்று கேட்டார். இறுதிமூச்சு மட்டுமன்றி, மூச்சுக் கிடந்த இறுதியும் சைவத் தொண்டுதான் அவர் குறி.

"அப்பா கீழ்வகுப்புத் தொடக்கமே சைவம் கல்லூரிகளில் போதிக்கப்படுகிறது" என்றேன். "அப்படியா? மிக நல்லது. புத்தகங்களைப் பார்ப்போம்" என்ருர். அவற்றை ஒவ்வொன்ருகப் பார்த்துவிட்டு "நல்ல முயற்சிதான், ஆனுல் சைவத்தைக் காணேன்" என்ருர். "ஏனப்பா?" என்றேன். "ஆறும் வகுப்பு, பாடம் ஒன்று, பந்தி மூன்றை வாசி" என்ருர்.

"நிலையில்லா இவ்வுடம்பினை நிலையானதெனத் தவருக நினைக்கின்ருேம். அதனுல் பல செயல்களைச் செய்கின்ருேம். அவை வினையெனப்படும்.", "நிறுத்து" என்ருர். நிறுத்தினேன். "வினை செய்வதற்குக் காரணம் நிலையாமையா? அறியாமையா? சொல்லு" என்ருர்.

'தன்மமோடு அதன்மமாகி' என்னும் சித்தியாரின்படிகன்ம மலத்தால் உயிர் கன்மம் செய்கிறது" என்றேன். "நீ என்ன வேலை செய்கிருய்? இந்த விஷமங்களைத் தடுக்க என்னமுயற்சி எடுத்தாய்?" என்ருர். ஏதோ சிக்கலில் அகப்பட்டுத் தப்பும் வழிதெரியாது கதையைமாற்ற முயன்றேன்.

"அப்பா உங்களைத்தான் சைவப் பெரியார் என்று தலை

(5-ம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்துப்பொதுசன நூல்நிலையம்-7

# படிப்பார்வம் வளர்த்த நூல்நிலையம்

க.சி. குலரத்தினம்

அன்று ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த நூல்நிலையம் வசதிகள் குறைவான கட்டடமும் சூழ்நிலையுமாயினும் வாசிப்பவர்களுக்குப் போதிய நூல்களையும் சஞ்சிகைகளையும் கொண்டிருந்தது. அக்காலத்தில் வீடுகள் தோறும் திரட்டப் பெற்ற நூல்களுள் சிவதருமோத்தாம், நீலகண்டபாடியம் சித்தாந்த தீபிகை ஆறுமுகத்தம்பிரானின் பெரிய புராணவுரை கலியாணசுந்தரனுரின் நவசக்திப்பழைய இதழ்கள் முதலிய கிடைத்தற்கரிய நூல்கள் பல அடங்கியிருந்தன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, நவசக்தி முதலிய சஞ்சிகைகளின் பழைய இதழ்கள் மலர்கள் வந்து குவிந்திருந்தன.

அக்காலத்தில் லண்டன் மெற்றிகுலேசன், இன்ரர், பீ. ஏ. முதலிய பரீட்சைகளுக்கு வெளிவாரி மாணுக்கராக ஆயத்தப்படுத்திய பரீட்சார்த்திகள் பலரீ, பகலிரவாக அங்கிருந்து படிப்பது வழக்கம், அங்கிருந்து படித்துப் பயன் பெற்ற ஒருவர் இன்று ஈழநாடு பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கம் அருமையாக எழுதிவருகின்றவராகிய N.சபாரத்தினம் அவர்களாவர். இவரைப்போல் இன்னும் பலர் அங்கேபயன்பெற்றனர்.

நூல் நிலையத்தில் அக்காலத்தில இரண்டுநீளமான மேசைகளும் ஒரு எழுத்து மேசையும் இரண்டு நீளமானவாங்குகளும் பதினைந்து கைக்கதிரைகளும் இரண்டு கண்ணுடி அலுமாரிகளும் இரண்டு அறிவித்தல் பலகைகளும் ஒரு மணிக்கூடும் இருந்தன.

நூலகத்தின் ஆரம்பத்தில் சேர்ந்த ரூபா 1002-41 சதத்தைவிட, பின்னர் ரூபா 541-85 சதம் சேர்க்கப்பெற்றது. இத்தொகையில் நூல் நிலையச்செலவுக்குப் பயன்பட்ட தொகைபோக எஞ்சிய 517-86 தேசீய சேமிப்பு வங்கியில் சேமிக்கப்பெற்றது.

#### நூல்களின் விபரம்

நூலகத்தின் ஆரம்பத்தில் அங்கே இரவல் கொடுக்கும் பகுதியில் 844 நூல்கள் இருந்தன. இவற்றுள் 150 நூல்கள் புதிதாக வாங்கப் பெற்றவை. எஞ்சிய 694 நூல்களும் அன்பர்கள் அங்கத்தவர்கள் அபிமானிகள் அவ்வப்போது அன்பளிப்புச் செய்தவையாகும்.

#### நூல்களை அன்பளிப்புச் செய்தவர்கள்

வணக்கத்துக்குரிய கலாநிதி

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### நற்பணிபுரியும் இளைஞர் ஒன்றியம்

வண்ணை தட்டாதெரு கலாஜோதி ஒன்றியம் கடந்த பல்லாண்டு காலமாக சைவத்திற்கும், தமிழுக்கும், விளையாட்டுத்துறைக்கும் அருந்தொண்டாற்றிவருகின்றது. இந்நிலையத்தினர் வழமைபோல இவ்வாண்டும் நல்லூர் கந்தன் உற்சவ காலத்தின்போது கந்தன் அடியார்களுக்கு நற்பணிபுரிய முன்வந்துள்ளனர்.

இந்நிலையம் கடந்த 23 வருடகாலமாக தண்ணீர்ப்பதந்ல் அமைத்து தாகசாந்தி செய்வ

(5 ம் பக்கம் பார்க்க)

## இன்று நல்லைக்கந்தன் 2-ம் திருவிழா

கோலமாமஞ்ஞை தன்னில் குலவிய குமரன்தன்னை
பாலனென்றிருந்தேன் அந்நாட் பரிசிவை
உணர்ந்திலேன்யான்
மாலயன்தனக்கும் ஏனைவானவர்தனக்கும் யார்க்கும்
மூலமாய் இருந்தவள்ளல் மூவிருமுகம்
கொண்டுற்ருன்

— கந்தபுராணம்

# "கொலைச்சம்பவம் நடந்த இடத்தைப் பார்த்து வரைபடம் வரைந்தேன்"

## கம்பர்மலை அறுவர் கொலை வழக்கில் சப் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(புலோலி)

இக்கொலைச்சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நான் போனபோது 1-ம் சாட்சியான நாராயணசாமியும் 3-ம் சாட்சியான காஞ்சனவதியும் சமுகமாக விருந்தார்கள். அவர்கள் கொலைச்சம்பவம் நடைபெற்ற பல்வேறு இடங்களையும் எனக்குக்காட்டினர்கள். அதன்படியே நான் வரைபடத்தை வரைந்தேன்.

இவ்வாறு, கம்பர்மலை துப்பாக்கிச் சூட்டு அறுவர் கொலை வழக்குவிசாரணையில் வரைபடத்தைச் சமர்ப்பித்துச் சாட்சியமளித்தவல்வெட்டித்துறைப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. சமரவீர குறிப்பிட்டார். இக்கொலைவழக்கு விசாரணைபருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டு வருகின்றது.

இக் கொலைச்சம்பவத்தின் போது கந்தையா அழகம்மா, நாராயணசாமி அழகம்மா நாராயணசாமி சாந்தஸ்வரன் கருணேஸ்வரன் யோகானந்தன் ஜெயநாயகவதி, கே. யோகானந்தன் ஆகிய ஆறுவருமே துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொலைசெய்யப்பட்டவர்களாவர். இக்கொலைச் சம்பவங்கள் தொடர்பான எதிரிகளான மகேந்திரன், தங்கராசா, தில்லைநடராசா, இந்திரன், தேவராசா, துரைராசா, அப்புத்துரை ஆகிய எழுவரையும் வல்லையில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டும் வாளால்வெட்டப்பட்டும்பயங்கரமாகக்கொலைசெய்யப்பட்ட அப்புத்துரை, துரைராசா, தேவராசா ஆகிய மூவரும் தவிர்ந்த ஏனைய நால்வரும் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணி எம். வேலும்மயிலும், சட்டத்தரணி ஆர். டி. இரத்தினசிங்கம் ஆகியோரும் எதிரிகள்சார்பில் சட்டத்தரணிகளான வி. ஸி. மோதிலால்நேரு, என். கிருஷ்ணராசா, கே. முத்துக்குமாரு எஸ். சிவானந்தன் ஆகியோரும் ஆஜராகிஇருந்தனர்.

வல்லைமுக் கொலை வழக்கு கடந்த தவணை நீதிபதி திரு. வி.பி. சுந்தரங்கம்முன்னிலையில் விசாரணைக்கொடுத்துக் கொள்ளப்பட்டபோது வல்வெட்டித்துறைப் பொலிஸ்சார்பில் சாஜண்ட் ஆஜராகிஇருந்தார். நீதவான் மறுதவணைக்கு வல்வெட்டித்துறை சப்இன்ஸ்பெக்டரோ அல்லது இன்ஸ்பெக்டரோ மன்றில் சமுகமாக விருக்கவேண்டும்என்று உத்தரவிட்டதுடன் சார்ஜண் இது சம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி / இன்ஸ்பெக்டர்க்கு அறிவிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இத்தவணையின் போது வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு ஜினிகேயும், சப்இன்ஸ்பெக்டர் திரு. சமரவீரவும் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு ஜினிகே தற்போது இங்கு நிலவும் சூழ்நிலை காரணமாக இந்த வழக்கின் சில தவணைகளுக்கு சமுகமளிக்க முடியாமல் போய்விட்டதாகவும் அதற்காகத் தன்னை மன்னிக்கும்படியும் கோரியதுடன், இனிமேல் நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கும் வல்வெட்டித்துறைப் பொலிசாரினல் தாக்கல் செய்யப்பட்ட கொலை வழக்குகளுக்குத் தவருது தான் சமுகமளிப்பேன் என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சப் இன்ஸ்பெக்டர் திரு சமரவீர வரைபடத்தைச் சமர்ப்பித்து சாட்சியமளித்தார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான வி. ஸி. மோதிலால்நேரு, என். கிருஷ்ணராசா ஆகியோர் குறுக்கு விசாரணை செய்தனர்.

# வாழ்க்கையில் கஷ்டம் இளம் கணவர் தற்கொலை!

(வவுனியா)

காதலித்துத் திருமணம் செய்த இளைஞர் ஒருவர் வாழ்க்கைக் கஷ்டத்தைத் தாங்கமுடியாது கிருமிநாசினிக்குப் பலியானர்.

மேற்படி சம்பவம் ஓமந்தையில் நடந்துள்ளது.

முத்தையா நாகராசா என்ற நபரே இவ்வாறு மரணமானர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. திஸ். கே. பாலசிங்கம் மரணவிசாரணை நடத்திஞர்.

மரணவிசாரணையின் போது இறந்தவரின் மனைவி சூரியகலா (வயது 20) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காதலித்துத் திருமணம் செய்த எமக்கு வாழ்க்கையில் பெரும் கஷ்டம் ஏற்பட்டது. அடிக்கடி சாராயம் குடிக்கும் பழக்கம்கொண்ட எனது கணவர் சம்பவதினம், வாழ்வதைவிடச் செத்துப்போவது தான் நல்லது என்று கூறினர். கஷ்டம் ஏற்படும்போதெல்லாம் இவ்வாறு சொல்லிக் கொண்டிருப்பார்.

வவுனியா போய்வருவதாகக் கூறிச்சென்றவர் தோட்டத்தில் மருந்து குடித்துவிட்டார் என அறிந்து உடன் அங்கு சென்று முதலுதவி செய்தோம். பின் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதித்து ஒரு மணித்தியாலயத்தின் பின் மரணமாகிவிட்டார்.

பொலிஸ் அலுவலர் திரு. பியதிலகா சாட்சியை ஆஜர் செய்தார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (இ)

## நற்பணி

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

துடன், கடந்த 6 வருடங்களாக யாழ். மாவட்ட கரபந்தாட்ட கழகங்களை அழைத்து மின்னெளிக் கரப்பந்தாட்டத்தையும் நடாத்திவருகிறது இம்மின்னெளிக் கரப்பந்தாட்டம் வழமைபோல் எதிர்வரும் 9-08-82ம் திகதியில் இ நிலைய மைதானத்தில் இடம் பெறும்.

கடந்த 17 ஆண்டுகளாக மாபெரும் சமய அறிவுப்போட்டியை நடத்திவரும் இந்நிலையம் எதிர்வரும் 31-7-82ல் யாழ். இந்துக் ல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் மேற்படி கல்லூரி அதிபர் திரு. ச. குமாரசாமி தலைமையில் மேற்படிபோட்டியை நடத்த திட்டமிட்டுள்ளது. இருபெரும் பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டிக்கு யாழ். மாவட்டத்தின் பல பாடசாலைகளிலும் இருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொள்வர். ஒவ்வொரு பிரிவுக்கும் தலா பத்து பரிசில்கள் வீதம் வழங்கப்படுவதுடன் முதல் பரிசில்களாக வழமைபோல தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

இத்துடன் கடந்த பல்லாண்டு காலமாக நல்லூர் கந்தன் இரதோற்சவத்தின் போதும், தீர்த்தஉற்சவத்தின் போதும் வழங்கப்படும் அன்னதானம் வழமைபோல் இவ்வாண்டும் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மேற்படி நிலையம் ஒரு நூல் நிலையத்தையும், கலையரங்கத்தையும் கொண்டுள்ளதோடு அதன் அருகில் அமைந்துள்ள சிவயோகமுனியப்பர் ஆலயத்தையும் பரிபாலித்துவருகிறது.

கி. கோணேஸ்வரன்,

## சைவப்பெரியார் ..

(4-ம்பக்கத் தொ ச்]

வணங்குகிறது சைவ உலகம்'' என்று மழுப்பினேன். ''உந்த பச்சோந்தி சைவ உலகத்தால் என்ன பிரயோசனம்? எதற்கும் ஆமாப்போடும்'' என்ருர். பெரியார் சிறிது கோபம் தணிந்திருத்தலைக்கண்டு, மெல்ல நவீன சைவத்தைப்பற்றி கருத்துக் கூறத் தொடங்கினேன்.

''அப்பா! இப்போது சைவர் எம்மதமும் சம்மதமும் என்னும் பரந்த நோக்குடையர்'' என்றேன். ''என்ன சொல்லுகிருய்?'' என்று சீ வந்தார். தலைமீது விழப்போகும் குட்டைத் தவிர்க்க சிறிது தள்ளிநின்றேன்.

''உந்தப் பரந்த நோக்கு வளர்ந்து பரந்து சென்று ஒன்றுமே இல்லாமல் கரந்துபோகிற நோக்காகும். ஒருவன் ஒரு நேரத்தில் ஒரு வழியைத்தான் பின்பற்றலாம். எல்லாவழியலும் எப்படிப்போக முடியும்? விருப்பமில்லாவிட்டால் சைவத்தை விடு. சைவப் போர்வை போட்டுக்கொண்டு கண்டபடி நடவாதே'' என்ருர்.

''சரி அப்பா! இப்போது செய்யவேண்டியதென்ன?'' என்று பணிவாகக் கேட்டேன். ''நீ சொல்! உனக்குத் தெரியாதா?'' என்ருர். ''அப் நீங்கள் மாணவர்களுக்கெ எழுதிய திருவருட்பயன் உரை பாடநூல் அநுபந்தத்தில் வாலாகித் தொங்குகிறது. திருவருட்பயன் மீளவும் பாடநூலாக்கவேண்டும். சைவ போதம் 1-ம், 2-ம் புத்தகங்களும் பாடநூல்களாக வேண்டும். நாவலருக்குச் சிலைஎடுத்த சமுதாயம் சைவ விஞ விடைகளை பாடநூல்களாக்கப் பாடுபடவேண்டும்.''

''அப்படியே செய்'' என்று ஆசீர்வதித்தார். நானும் விழித்தேன்.

## ஓராண்டு பூர்த்தி சிரமதானம்

[யாழ்ப்பாணம்]

அபிவிருத்திச்சபை ஓராண்டு பூர்த்தியை ஒட்டி கோண்டாவில் மேற்கு, கிழக்கு கிராமோதயசபைகள் ஒருங்கிணைந்து கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் சிரமதானப்பணி மேற்கொண்டனர்.

சிவநெறிப்புரவலர் க. கனகராசா, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவர், மயான அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. க. சபாபதி, திரு. சுப்பிரமணியம், திரு. ஆ. செல்லையா உட்பட பலர் மரங்களை நாட்டினர்கள். [சி]

## படிப்பார்வம் வளர்த்த...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐசாக் தம்மையா, நாயன் மார்க்கட்டு வைத்தியர் இராமநாதன் இளைப்பாறிய வித்தியா தரிசி நல்லூர் கந்தையா, கனம் கல்வி மந்திரியார் C. W.W. கன்னங்கார வணக்கத்துக்குரிய ஞானப்பிரகாசர், மானிப்பாய் ஆசிரியர் A. V. சோமசுந்தரம், இந்து சாதனம் ம. வே. திருஞானசம்பந்தர், ஈழகேசரி நா. பொன்னையா, நவாலி ந. ச. கந்தையா, புரொக்ரர் T.N. சுப்பையா ஆகியோராவர். இன்னும் சங்கைக்குரிய யாழ்ப்பாணத்து அதிமேற்றிராணியார், கிறிஸ்தவ சேவாசங்கத்தார் சென்னை பைபிள் சங்கத்தார், யாழ்ப்பாணம் வெஸ்லியன் சங்கத்தார், கொழும்பு முஸ்லிம் சங்கத்தார் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் தனிப்பட்ட வீடுகளில் ஒன்றிரண்டு வழங்கியவர் முதலானேராவர்.

### வாசிகசாலைக்குச் சஞ்சிகைகள் பத்திரிகைகள் உதவியவர்கள்

வாசிகசாலையில் எல்லோருக்கும் பயன்படும் வகையில் சில சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் அவ்வவ் முகாமையினர் இலவசவாக வழங்கிஞர் அவை:-

வீரகேசரி, இந்துசாதனம், உதயதாரகை, சத்திய வேத பாதுகாவலன், ஈழகேசரி, ஞாயிறு, களிரட்டை, கமத்தொழில் விளக்கம் என்பனவாம்.

### சிங்களப்பத்திரிகை

பல்வைத்தியராயும், நகர சபை அங்கத்தவராயும் இருந்த கலாநிதி சாள்ஸ் பத்திராஜ சிங்களப் பத்திரிகை ஒன்றையும் சஞ்சிகை ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுத்துவந்தார். கல்விப் பணிப்பாளர் கொழும்பிலிருந்து சமாசாரப் பத்திரிகை ஒன்றை அனுப்பி வந்தார்.

### சங்கம் விலைக்குப் பெற்றவை

நூலகச்சங்கம் [விலைக்குப் பெற்றுவந்த சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் தமிழ்நாடு சுதேசமித்திரன், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, ஆனந்தபோதினி, பாரதி, சித்தாந்தம், கலைமகள், கொங்குமலர், தமிழ்ப்பொழில் என்பனவாம்.

### ஆங்கிலப்பத்திரிகைகள் சஞ்சிகைள்

அக்காலத்தில் பிரசித்தமாயிருந்த ஆங்கிலப்பத்திரிகைகள் சஞ்சிகைகள் பல வாசிகசாலையில் இடம் பெற்றிருந்தன. அவற்றுள் அவ்வவ் முகாமையாளர் இலவசமாக அனுப்பியவை இந்து ஓகன், பிறீபிறெஸ், மோணிங்ஸ்ரார் கதலிக்காடியன், ஆத்ரா, சண்டே கபிலிக்ரைம்ஸ், இன்னும் எஸ். பி. சி. ஏ. சங்கப் பத்திரிகை என்பனவாம்.

### சங்கத்தார் விலைக்குப் பெற்றவை

ரைம்ஸ்ஒவ் சிலோன், தடெயிலிநியூஸ், மெட்ருஸ் ஹிந்து மொடேண்றிவியு, திரிவேணி தஹிந்து மயின்ட் என்பனவாம்.

அரசாங்கத்தார் தங்கள் பரிபாலன அறிக்கைகள் சிலவற்றை அவ்வப்போது இலவசமாக அனுப்பிவந்தனர். கல்விப் பணிப்பாளர் தமக்குக் காலந்தோறும் பரிசீலனைக்கு கிடைத்த நூல்களைத் தம் தேவை தவிர்ந்தவற்றை அனுப்பிவைத்தார் அவை பெரும் பாலும் பாடசாலைக்குரிய நூல்களாயிருந்தன.

— தொடரும்.

## சென் ஜோன்ஸ் ஆரம்ப பாடசாலை விளையாட்டுப் போட்டி

[அரியாலை]

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் தொம்சன் இல்லம் 157 புள்ளிகளைப் பெற்று சம்பியனகியது. ஏனைய இல்லங்களான பீற்ரே, ஜோன்சன், ஹண்டி, பாகிற்றர் இல்லங்கள் முறையே 138, 134, 123, 101 புள்ளிகளைப் பெற்று இரண்டாம், மூன்ரும், நான்காம், ஐந்தாம் இடங்களைப் பெற்றன.

சாம்பியன் வீரர்களாகஎட்டு வயதுப் பிரிவில் கரிஸ் பெஞ்சமின்னும் ஜெயகிஷ்சாந்தனும் ஒன்பது வயது பிரிவில் யே. எதிர்வீரசிங்கமும் பத்து வயதுப் பிரிவில் ஜீ. வர்னேந்திரனும் பதினெரு வயதுப் பிரிவில் பி. பி. ஜீவச்சந்திரனும் பன்னிரண்டு வயதுப்பிரிவில் பி. திருக்குமாரும் சம்பியன் வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி பரிசில்கள் வழங்கினர்.


இறக்குமதி செய்யப்பட்ட

பிளைவூட்

கதவுகள் ☆ சீற்றுகள்

(தேக்க டிசைன்களில்)

ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனத்தின்

★ பிளைவூட் ★ சிப்போட்

கதவுகள் ☆ சீற்றுகள்

நாபன் டிரேட்ஸ்

[சேகரம் கட்டிடம்]

74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

போன்: 8162


## கதிர்காம புராணம்

திரையெறி மாணிக்கத் தெய்வநதி தனின்மூழ்கித்
தரைபுகழுங் கதிர்காம தலத்துறையுஞ்
சண்முகனைத்
தரிசனமும் செயல்பெறுவோர் தக்சோராய்
வாழ்ந்துபினர்
உரைபெறுநற் போகமூழ்கி உயர்முத்தியடைகுவாரே

- வித்துவான் சி. நாகலிங்கம்பிள்ளை

# “சீரானகல்வி வளர்ச்சியை டியூட்டரிகள் பாதிக்கின்றன”

## — பேராசிரியர் சிவஞானசுந்தரம்

(யாழ்ப்பாணம்)

கல்வி மாணவர்களுக்கு நற்கண் அறிவை வளர்க்கின்றது. அறிவு வளர பண்பு தயமாகும். ஆகவே மாணவர்கள் கல்லூரிகளிலிருந்தே அறிவொளியைப் பெறுவதே றிக்கோளாக இருக்கவேண்டும். பரிசளிப்பு விழாக்களைக் கல்லூரிகளில் நடத்தப்படுவதால் மாணவர்கள் அறிவு வளர்ச்சியடைகின்றார்கள்.

இவ்வாறு சுன்னாகம் ஸ்கந்தரோதயக் கல்லூரி பரிசளிப்பு விழா அதிபர் பொ. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ், மருத்துவபீட சமூக சுகாதார பேராசிரியர் வைத்தியகலாநிதி திரு. செ. சிவஞானசுந்தரம் (நந்தி) பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

‘ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்நாளில் என்றோ ஒரு முறையாவது பரிசு பெறுகின்றன். நான் கல்லூரி மாணவனாக இருக்கையில் இரண்டே இரண்டு பரிசுகள் பெற்றேன். ஆயினும் இன்று இப்பரிசளிப்பு விழாவிற்கு அழைக்கப்பட்டது எனக்குக் கிடைத்த மூன்றாவது பரிசாகும்.

இன்று மாணவர்கள் டியூட்டரிகள் என்று அலைந்துதிரிகின்றார்கள். இது ஒரு பாஷனாக மாறிவிட்டது. இந்நிறுவனங்கள் கல்லூரிகளின் நிழல்களாக உருவெடுத்து சீரான கல்லூரி வளர்ச்சிக்கும் நிர்வாகத்துக்கும் பங்கம் செய்யும் நிலைக்கு வந்துள்ளமை வருந்தத்தக்கது.

மாணவி செல்வி ந. இரத்தினவல்லி வரவேற்புரை வழங்கினார். ஸ்கந்தாவின் முன்னாள் ஆசிரியர் ரீ. சிவசுப்பிரமணியம் நன்றியுரை கூறினார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# ஆங்கில தினப்போட்டிகளில் யாழ். இந்துவுக்கு முதலிடம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் வட்டார ஆங்கில தினப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றன. இப்போட்டிகளில் யாழ். இந்துக் கல்லூரியே குழு, தனி நிகழ்ச்சிகள் பலவற்றிலும் முக்கிய ஸ்தானங்களைப் பெற்றுக்கொண்டது. இதன் மூலம், இப்போட்டிகளில்பங்கு பற்றிய கல்லூரிகளிடையே யாழ். இந்துக் கல்லூரியே முதன்மை ஸ்தானத்தைத் தட்டிக் கொண்டது.

குழுநிலைப் போட்டிகளின் முடிவுகளில் யாழ். இந்துபெற்ற நிலைகள் பின்வருமாறு:—

6-ம் வகுப்பு: சொல்வதெழுதல்: 2-வது; 7-ம் வகுப்பு: சொல்வதெழுதல்: 2-வது; 8-ம் வகுப்பு: சொல்வதெழுதல்: 1-வது; 9-ம் வகுப்பு: சொல்வதெழுதல்: 1-வது; 10-ம் வகுப்பு: சொல்வதெழுதல் 2-வது.

குழுநிலை நாடகம்:- 6-ம் வகுப்பு: 1-வது; 7-ம் வகுப்பு; 3-வது: 8-ம் வகுப்பு: 2-வது; 9-ம் வகுப்பு: 1-வது; 10-ம் வகுப்பு: 1-வது;

குழுநிலை கவிதை ஒப்புவித்தல்:- 6-ம் வகுப்பு: 1-வது; 7-ம் வகுப்பு: 1-வது; 8-ம் வகுப்பு; 1-வது; 9-ம் வகுப்பு: 2-வது.

### தனி நிகழ்ச்சிகள்

கையெழுத்து:- 6-ம்வகுப்பு: 2 வது:- எம். மதிமன்னன், 7-ம்வகுப்பு: 1-வது—எம்.முருகவேல்; 3-வது—ரி. ரமேஷ்,8-ம் வகுப்பு: 1-வது—ஏ ஜ். ஸ்ரீரங்கன், 3-வது— என். குருபரன்.

நெறிப்படுத்தப்பட்ட கட்டுரை எழுதல்: 8-ம வகுப்பு: 2-வது—என் கருபாரன், 9-ம் வகுப்பு: 1-வது—பி. மணிவண்ணன், 2-வது— ஈ. கலையழகன், 3-வது—என். ராகவன், 10-ம் வகுப்பு: 2-வது— ரி. [illegible] நாதன்.

குழுநிலைக் கவிதை ஒப்புவித்தல்: 6-ம் வகுப்பு: 1-வது;7-ம் வகுப்பு: 1-வது; 8-ம் வகுப்பு: 1-வது; 9-ம வகுப்பு: 2-வது; 10-ம் வகுப்பு: (தனி நிகழ்ச்சி) 1-வது — கே. செந்தில்குமரன், 8-ம் வகுப்பு:3-வது—ஜே.அனோஜன்.

வாசிப்பு: 8-ம்வகுப்பு: 2வது கே. நிரஞ்சன், 9-ம் வகுப்பு; 1-வது— பி.லக்ஷ்மண், 3-வது— பி.ரவிச்சந்திரன், 10-ம்வகுப்பு 1-வது கே. உமாபாலன், 2-வது வி. பிரபாகரன்.

அபிநயப் பாடல்:- 6-ம் வகுப்பு: 3-ம் இடம்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் வெற்றிகளுக்கு அக்கல்லூரி ஆங்கில ஆசிரியர்கள் திருவாளர்கள் கே. மகேசன் (தலைவர்), ம. மனோகரன், மயில்வாகனம், எஸ். செல்வநாதன், ரி. விசாகராஜா, எம் பெருமான் ஆகியோர் முயற்சி காரணமாகவிருந்தது.

# நல்லூர் மேற்குவீதிகடைகள்:

## நல்லூர் யாழ்.எம்.பிக்கள்நடவடிக்கை

[கோண்டாவில்]

நல்லூர் ஆலயத்தின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ள கடைகள் யாவும் இடமாற்றம் செய்யப்படவுள்ளன. இதற்கான அறிவித்தல் கடந்தவாரம் அதிகாரிகளினால் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயவீதியில் கடை வைத்திருக்கும் உரிமையாளர்கள் பலர் தமக்கு மாற்றுநடவடிக்கையாக யாழ். மாநகரசபை மூலம் கல்யாண மண்டபம் அமைந்திருக்கும் இடத்திற்கு அண்மையில் கடைகளைக்கட்டி தம்படியும் இவ்வாரம் கடையைவிட்டு வெளியேற வேண்டும் என்ற அறிவித்தல் பிரகாம் வெளியேற முடியாமல் இருக்கிறதுஎன்றும், தாம் பெருந்தொகைப் பணத்தை திருவிழாவை முன்னிட்டுதமது ஸ்தாபனத்தில் முதலீடு செய்திருக்கிறார்கள் என்றும் நல்லூர் எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம், யா. எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரிடம் முறையிட்டனர்.

இவர்களின்வேண்டுகோளின் பிரகாரம் நல்லூர், யாழ். பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ் மேயர் திரு. இராசா விசுவநாதன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் ஆகியோருடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் திருவிழா இம்முறை முடியுமட்டும் கடைகளை அகற்றவேண்டாம் எனவும் கேட்டுள்ளனர். (இ)

T. V. ஏரியல் அமைப்பில்
முதன்மைமிக்க ஸ்தாபனம்
சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், TV ஏரியல்
கோளாறுகள் சரி செய்யலாம்.
எமது பராமரிப்பு சேவை
24 மணி நேரமும் செயல்படுகின்றது
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்
எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பினான்ஸ் வசதியுடன் பெறலாம்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.

# நல்லூரில் முதலுதவி சாரணர் படை

[கோண்டாவில்]

நல்லூர்த் திருவிழா உற்சவத்தை முன்னிட்டு வழமை போல் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினரும் சாரணர் குழுவினரும் கடமையில் ஈடுபடுவர்.

சென்ஜோன்ஸ் முதலுதவிப் படையினர் பிரிவு அத்தியட்சர் திரு. தர்மரத்தினம் தலைமையில் சுமார் 75 பேர் கடமையாற்றுவர்.

சாரணர் பிரிவினர் வடபகுதிப் பொறுப்பாளர் திரு. கந்தமூர்த்தி தலைமையில் சுமார் 100 பேர் கடமையாற்றுவர். (இ)

# ஒருலட்சம்போத்தல்கள் தேங்கிக்கிடக்கிறது?

[யாழ்ப்பாணம்]

சங்கானையில் இயங்கிவரும் பனங்கள்ளைப் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையில் சுமார் ஒருலட்சம் போத்தல்கள் விற்பனையின்றி தேங்கிக் கிடக்கிறது.

சந்தைப்படுத்தும் விடயத்தில் போதியளவு ஒத்துழைப்பின்மையே இத்தேக்கத்துக்குக் காரணமென அறியப்படுகின்றது.

மேற்படி தொழிற்சாலையில் கடந்த ஆண்டைவிட இவ் உற்பத்தி அதிகரித்திருந்தது. பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்பினாலேயே உற்பத்தி அதிகரித்துள்ளதாக சபையின் அதிகாரி ஒருவர் கூறினார். [கி]

# “கிறிஸ்தவ ஆசிரியர்கள் முன்மாதிரியாகத் திகழவேண்டும்”

(அரியாலை)

கிறிஸ்தவ ஆசிரியர்கள் எப்பாடசாலைகளில் பணியாற்றினாலும் அவர்கள் மற்றவர்களுக்கு மிகவும் முன்மாதிரியாக விளங்கவேண்டும். தமது ஆசிரியப்பணியுடன் தம்மாலான சமூக சேவைப்பணிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. சாமுவேல் சுன்னாகம் கிறிஸ்த சேவா ஆச்சிரமத்தில் நடைபெற்ற வடபிரதேச கிறிஸ்தவ ஆசிரிய சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஞானஒடுக்கத்தையொட்டி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், கிறிஸ்தவ ஆசிரியர்களின் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருவது வருத்தத்திற்குரியதாகும். தமது பிள்ளைகள் பொறியியலாளர்களாகவும், வைத்தியர்களாகவும் வரவேண்டும் என்று விரும்பும் கிறிஸ்தவ பெற்றோர் தமது பிள்ளைகளில் ஒரு சிலரையாவது ஆசிரியத் தொழிலை மேற்கொள்ளும்படி ஆலோசனை கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆச்சிரம தேவாலயத்தில் நடைபெற்ற திருவிருந்து ஆராதனையை யாழ்ப்பாண அர்ச்சடீக்கன் அருட்திரு. சாம், டி. ஹோர்சிங்டன் அடிகளாரும் சேவக் அருட்திரு. சாம் அல்பிரட் அடிகளாரும் ஒப்புக் கொடுத்தனர்.

ஆசிரியர்களுக்கான வேதாகம விரிவுரையை சுண்டிக்குளி பரி. யோவான் ஆலய சேகரக்குரு அருட்திரு. யே. சர்வானந்தன் அடிகளார் நடத்தினார்கள். பெருந்தொகையான ஆசிரியர்கள் இந்த ஞானஒடுக்கத்தில் கலந்துகொண்டனர்.

# அமரர் ஐயாத்துரை



கூட்டில இருந்த பறவை கூட்டை விட்டுப்பறந்து செல்வது போல் அமரர் வல்லிபுரம் ஐயாத்துரையின் உயிர் அவருடலை விட்டுச் சென்று விட்டது. இவ்வுலகில் வாழ்ந்தகாலத்தில் உலக கலகலப்புக்களில்மட்டுமல்ல ஐம்புலன்களின் ஆரவாரங்களிலும் அகப்படாது இந்தநகரத்து மத்தியில் வாழ்ந்தவர் இவர். மிதித்தால் புல்லுக்குநோகாமல் நடக்கும் இவரது பண்பு எவருக்கும் இவரிடம் கண்ணியத்தை ஏற்படுத்துவதாக இந்தது. இவ்வுலகில் அமைதியைக் கண்ட அமரர் ஐயாத்துரையின் ஆன்மா சாந்தியடையட்டும். இவரின் மறைவு நெருநல்உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமைக்குச் சிறந்த இலக்கியமாகும்.

— ‘ரத்தினம்,

# சிறுகதை நூல்கள் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

‘சாந்த’னின் ‘முளைகள்’ ‘கிருஷ்ணன் தூது’, ஆகிய இரு சிறுகதைதொகுதிகளின் வெளியீட்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை திரு. செ. வரதலிங்கம் தலைமையில் யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை வரவேற்புரை நிகழ்த்துவார். ‘மல்லிகை’ ஆசிரியர் டொமினிக் ஜீவா வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

மேற்படி விழாவில் செம்பியன் செல்வன் குமரன் சிவநாதன், சிவலிங்சராசா ஆகியோர்கள் விமர்சனவுரை நிகழ்த்துவார்கள்.

# இன்று சைவப்பெரியார் குருபூசை

(சுழிபுரம்)

சைவப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனார் குருபூசை இன்று காலை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரையாற்றுவார். இதனைத் தொடர்ந்து சைவப்பெரியார் நூற்றாண்டுச் சபையினரின் மூன்றாவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் நடைபெறும். குருபூசை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இந்துமாமன்றத்தினர் ஆதரவில் நடைபெறும்.

# மதுரை விமானநிலையம் புனரமைக்கப்படும்

சென்னை, ஜூலை 25

மதுரை விமானநிலையம், ஓடுபாதை ஆகியன புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றன இத்தகவலை மத்தியபொதுப்பணித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புனரமைப்புவேலைகள் முடிவடைந்ததும், ராட்சதபோயிங் 737ரக விமானங்களும் மதுரை விமானநிலையத்தில் தரித்துச் செல்லக் கூடியதாகவிருக்குமென அறிவிக்கப்பட்டது.

89 லட்சம்ரூபா புனரமைப்பு வேலைக்கெனச் செலவிடப்படவிருக்கின்றது. [கி]

# தொலைபேசிக் கம்பிகள் திருட்டு

(மாவிட்டபுரம்)

வசாவிளான்- ஒட்டகப்புலம் வீதியில் 2000 ரூபா பெறுமதி

(7-ம் பக்கம் பார்க்க)

## தொலை

[6-ம் பக்கத் தொடர்ச்சி] யான 74 ருத்தல் தொலைபேசிக் கம்பிகள் திருடப்பட்டுள்ளன வாம்.

இரவு நேரங்களில் இக்கம்பிகள் இனந்தெரியாதவர்களால் வெட்டப்பட்டுத் திருடப்பட்டுள்ளதாம்

இதுகுறித்து தொலைத் தொடர்புத் திணைக்கள உத்தியோகத்தர் ஐ. செல்லத்துரை காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதுகுறித்துப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். [க]

# 83-ல் அமுலுக்குவரும்

# விகிதாசார பல்கலைக்கழக அனுமதி

## தமிழ் மாணவருக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

### பேராசிரியர் சந்திரசேகரம் எச்சரிக்கை

(அரியாலை)

1983ம் ஆண்டுமுதல் இன விகிதாசார அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிவழங்க அரசு ஆலோசித்து வருகிறது. இதனை அமுல் நடத்தினால் இது தமிழ் மாணவர்களுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் இதனை எதிர்த்து தமிழ் கல்விமான்களும், பெற்றோர்களும் குரல் எழுப்பவேண்டும் இப்பொழுது நடைமுறையில் இருக்கும் அநீதியான முறையிலும் பார்க்க இதுமிகவும் அநீதியாக அமையும்''

இவ்வாறு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை தலைவர் பேராசிரியர் ப.சந்திரசேகரம் கூறினார்.

மாணவிகளின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் கல்லூரி அதிபர் திருமதி செல்லையா வரவேற்புரை நிகழ்த்தினர். பேராசிரியர் சந்திரசேகரம் தம்பதிகள் மங்கள விளக்கேற்றிவைத்து விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

பேராசிரியர் சந்திரசேகரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

### 21 ஆயிரம் மாணவர் பல்கலைக்கழக அனுமதி பெற தகுதிபெற்றனர்

1982-ம் ஆண்டில் நடைபெற்ற பல்கலைக்கழக அனுமதியை எடுத்துப் பார்த்தால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 545 மாணவர்களும், மட்டக்களப்புப் பல்கலைக்கழகத் கல்லூரியில் 75 மாணவர்களும் ஏனைய பல்கலைக் கங்களில் முஸ்லீம் மாணவர்களுட்பட ஏறக்குறைய 900 தமிழ் மாணவர்களும் அனுமதிக்கப்பட விருக்கின்றனர். இலங்கைப்பல்கலைக்கழகங்களில் மொத்தமாக அனுமதி பெறுபவர்களின் தொகை 5245 ஆகும் ஆனால் அனுமதிக்குத்தகமை பெற்று விண்ணப்பம் செய்தவர்கள் தொகை 21 ஆயிரம் ஆகும் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி இருந்தும் சுமார் 10 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பஞ் செய்யவில்லை ஆகவே மொத்தமாகத்தகைமைபெற்ற மாணவர்களில் 17 சதவீதமானவர்களே அனுமதி பெறுவார்கள்.

பல்கலைக்கழகக்கல்வியே கல்வியின் சிகரம் என நாம் முடிவு செய்யக்கூடாது. ஒரு நாடு பொருளாதார சமூக, பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றில் முன்னேற்றம் அடைவதற்கு நடுத்தர தொழில்துறை நிபுணர்கள் அவசியமாகின்றனர். சோவியத் ஒன்றியம், ருமேனியா, ஐக்கிய அமெரிக்கா கியூபா, போன்ற நாடுகளில் நடுத்தர தொழில்துறைவளர்ச்சியே, அவற்றின் துரிதவளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

கல்வி வெள்ளைஅறிக்கையில் கூறப்படுவதுபோல விவசாயப் பயிற்சி கைத்தொழில் பயிற்சி, நிலஅளவைப் பயிற்சி, அச்சுவேலைப்பயிற்சி என்பன வளர்முக நாடான நமக்குச் சிறந்த பயன் அளிக்கும்

### முதன்மொழிக்கு இன்னும் விளக்கம் தரப்படவில்லை

1981-ம் ஆண்டில் வெளிவந்த கல்வி முன்மொழிவுகளில் முதல்நிலை, கனிஷ்ட நிலை, சிரேஷ்ட இடைநிலை, ஆகிய நிலைகளுக்குள் ஆக்கப்பட்ட கலைத்திட்டத்தில் அடக்கப்பட்டுள்ளன. இதில் முதலாவது பாடம் முதல்மொழி என்று கூறப்பட்டுள்ளது. முதன் மொழிஎன்பதற்கு இன்னும் தனியான விளக்கந்தரப்படவில்லை. இந்த நாட்டிலுள்ள அரசுமொழி, தாய்மொழி என்பன சிங்களமொழியும், தமிழ் மொழியுமாகும். 1943ம் ஆண்டில் இந்தநாட்டுக் கல்விமான்களை உள்ளடக்கிய கன்னங்கரா கல்விக்குழு இந்நாட்டு மாணவர்கள் எல்லோருக்கும் படிப்படியாக, பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரைச்கும் அன்னைமொழியே போதனமொழியாக இருக்க வேண்டுமென்றுதீர்மானித்தது இக்கருத்து உளவியல், மனித தத்துவ, சமதர்ம அடிப்படையில் எழுந்தது. இது கல்விச் சட்டமாகவும் உருவாக்கப்பட்டது. ஆனால் இச்சட்டம் இன்று நடைமுறையில் இல்லை என்பது எம்மில் பலருக்கு இன்னும் தெரியாது: ஏன் இம் மாற்றம் ஏற்பட்டது என்பதற்கு சரியான விளக்கமும் தரப்படவில்லை அன்னை மொழிப்போதனை மாணவர்களின் அடிப்படை, வாழ்க்கை உரிமையாகும். இந்நாட்டில் ஒரு மொழியே தேசிய மொழியாக உத்தியோக மொழியாக, விளங்கவேண்டும். இதன் மூலமே இந்நாட்டில் ஒருமைப்பாடு காணமுடியும் என சில அரசியல்வாதிகளும், சில கல்விமான்களும் சில அறிஞர்களும் கருதுகின்றனர். இக்கருத்து மனித, சமூகநீதிக்கும் உளவியற் கருத்துக்கும் முரணான கருத்துக்களை முன்வைத்த பண்பற்ற செயலாக அமைகிறது.

1966-ம்ஆண்டில் வெளிவந்த ஒரு கல்விச்சுற்றறிக்கையின் மூலம் இந்தநாட்டில் அன்னை மொழிகள் சிங்களமொழியும், தமிழ் மொழியும், என்றும் கூறி, குழந்தைகளின் போதனமொழியைப் பெற்றோர்கள், தேர்ந்து எடுக்கலாம் என்று கூறப்பட்டது, எனவே அரசு மொழியே போதனமொழி எனும் சட்டம் மாற்றம் செய்யப்பட்டு விட்டது. இதனை நாம் இன்னும்எண்ணாது இருக்கின்றோம் போதனமொழி மாற்றப்பட்டால் இனம் ஒழியும், பண்பாடு கலாச்சாரமரபு ஒழியும், ஆத்மீக சக்திஒழியும். 1972-ம் 1981-ம் ஆண்டுகளில் வெளிவந்த கல்விச் சீர்திருத்தங்களில் இது நிவிர்த்திசெய்யப்படவில்லை. அன்னைமொழி என்னும் சொல் முதல்மொழி, கல்விமொழி எனும் சொற்களால் திரிபுபடுத்தி வரயறை மாற்றி, அன்னைமொழியே போதனமொழிஎன்பதுகல்விச் சட்டமாகிய அது அரசியல் சட்டத்திலும் இடம் பெற வேண்டும்.

### சோவியத்தில் 66 அரசு மொழிகளும் போதனமொழிகள்

சோவியத் ஒன்றியத்தில் 66 அரசுமொழிகளும் போதனமொழிகள் என்றும் அரசியல் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 700 தமிழ் மாணவர்கள் சிங்கள மொழிமூலம் கற்கிறார்கள். கிழக்கு இலங்கையிலும், மலையகத்திலும் இந்நிலையின் வளர்ச்சி எமது சிந்தனையைக் கிளறவேண்டும்,

ஐக்கிய இராச்சியத்தில் ஆங்கிலம், வேல்ஸ்மொழி, ஐரிஸ் மொழி, ஸ்கொட்டிஸ் அல்லது கெலிக் ஆகிய நான்கு மொழிகளும் வளம்பெற்று விளங்கின. ஆனால் ஏகாதிபத்தியத்தின் விளைவாக ஆங்கிலம் தேசிய, உத்தியோக, போதன மொழியாகத் திணிக்கப்பட்டது. ஆனால் இன்று அங்கு தேசியவாதிகள், கல்விமான்கள், சமதர்ம வாதிகள் ஆகியோர்காட்டிய பூரண எதிர்ப்பினால் வேல்ஸ் மொழியும், ஐரிஸ் மொழியும் படிப்படியாக உரிய இடத்தைப் பெறுகின்றன. விரைவில் நான்கு மொழிகளும் தேசிய, உத்தியோக, போதன மொழிகளாக விளங்கும் என்பது உறுதி.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் தமிழ்மன்றம் தமிழ்விழாவுடன், பாரதி நூற்றாண்டு விழாவையும் இணைத்துக் கொண்டாடுவது பாராட்டுதற்குரியதாகும். தமிழ்கூறும் நல்லுலகம் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி வருகிறது. உலகில் பல பகுதிகளில், பல மொழிகளில் பாரதியின் ஆக்கங்கள் பெயர்க்கப்படுகின்றன. தமிழ்க் கவியாகத் தோன்றிய பாரதி பாரதக் கவியாகவும், அகிலம் போற்றும் கவிஞர்களில் ஒருவராகவும், ஏற்றுக் கொள்ளப்படும் நிலையை நாம் இன்று காண்கிறோம். பாரதியின் உள்ளார்ந்த ஆற்றலை, பலரும் உணரத் தொடங்கியதும், பாரதி ஒரு மகாகவி என்னும் உண்மை உறுதிப்படலாயிற்று. உலக இலக்கிய ஆசிரியர்களின் உன்னதமான வரிசையில் இடம் பெற்ற பாரதி தமிழ் இலக்கியப் பரப்பிலும், காலத்துக்கு காலம் உருவாகிய பெரும் புலவர்களின் வரிசையில் இடம் பெறுகின்றார்.

வள்ளுவன், இளங்கோ, கம்பர், பாரதி என்று பொதுவாக நாம் தமிழ்ப் புலவர்களை வரிசைப்படுத்துவது நிலைத்துவிட்டது. சங்க காலத்தில் வாழ்ந்த சான்றோர் பலர் சமகாலத்தில் வாழ்ந்தவர்களாவர். ஒரு புலவனின் உணர்வு அனுபவம், சமூக ஈடுபாடு உலகநோக்கு, சமத்துவ நோக்கு என்பன எம்மை அவன்பால் ஈர்க்கின்றன. கவிஞன் ஒரு சமூகத்தினை விமர்சனம் செய்பவன் மட்டுமல்ல, சமூகத்தினை மாற்றி அமைக்கும் சக்தி கொண்டவனாகவும் விளங்க வேண்டும்.

விழாவில் பாரதி நூற்றாண்டு மலர் ஒன்று வெளியிட்டுவைக்கப்பட்டது. மாணவிகளின் நடனம், கருத்தரங்கு, கவியரங்கு என்பனஇடம்பெற்றன. [இ]

## பங்களாதேஷுக்கு உப்பு ஏற்றுமதி

(புலோலி)

5 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு பங்களாதேஷுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது. ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களில் விளைந்த ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து பாகிஸ்தான் கப்பலான எம். வி. சபைஞ ஈஸ் மாயில் கப்பலில் ஏற்றப்பட்டு வருகின்றது. இவ்வுப்பு ஏற்றுமதியால் சுமார் 500 தொழிலாளர்கள் தற்காலிக வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். கப்பலில் உப்பு ஏற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இம்மாதம் 30-ம் திகதி வரை உப்பு ஏற்றும்வேலைகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து வெளிநாட்டுக்கு உப்பு ஏற்றுமதிசெய்யப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் வருடாந்த முத்தமிழ்விழா எதிர்வரும் 28-ம், 29-ந் திகதிகளில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் திருமதி இ. ஆனந்தகுமாரசுவாமியினால் ஆரம்பித்து வைக்கப்படும் இவ்விழாவில் இயல்-இசை-நாடகம் ஆகியவற்றுடன் கருத்தரங்கு, கவியரங்கு என்பனவும் இடம்பெறும். [உ]

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் – சாவித்திரி
ஜக்கம்மா
[புதிய பிரதி]

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
ஜெமினி, பத்மினி, எம். ஆர். ராதா, நாகேஷ்
சித்தி
(புதிய பிரதி)

ராணி (யாழ் நகர்) 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்–சாவித்திரி
மகாதேவி

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
100வது வெற்றித் திருநாளை நோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

இன்னும் 4 தினங்கள் மட்டும்
றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
ரஸிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
மோகனப் புன்னகை (கலர்)
அடுத்தவெளியீடு 'கயலும் கயரும்' (மலையாளம் கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
இன்று மட்டும்
கடல் மீன்கள் —கலர்—

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-30, 4-30, 7-00, 9-30
JIM KELLY in
The Tatoo Connection
(Karate Film)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர், ஜெயலலிதா, சோ நடித்த
வந்தாளே மகராசி
இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

## "திருமலை மாவட்டம்:

# சிங்கள மக்களை பெரும்பான்மை கொண்டதாக மாற்றப்பட்டுள்ளது"

[மட்டக்களப்பு]

"அநுராதபுர மாவட்டத்தின் கீழ் இருந்த புல்மோட்டை, தென்னமரவடி பதவிஸ்ரீபுர, உலந்திவேவ பரணமதவாச்சி ஆகிய 5கிராம சேவகர் பிரிவுகளைத் திருகோணமலை மாவட்டத்துடன் இணைத்ததன் மூலம் திருமலை மாவட்டத்தில் மேலதிகமாக 11 ஆயிரம் சிங்களவர்களும் 6ஆயிரம் தமிழர்களும் சேர்க்கப்படுகின்றனர், திருமலை மாவட்டம் சிங்கள இனத்தைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டயாக மாற்றுவதற்கு எடுக்கப்படும் திட்டமிட்ட நடவடிக்கையாகும்"

இவ்வாறு வாளைச்சேனை விபுலானந்த மைதானத்தில் தமிழ் ஈழவிடுதலைக் கழகத்தின் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய கழக அமைப்புச் செயலாளர் திரு. இரா. வாசுதேவா தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைக் கழகத்தின் கல்குடாத் தொகுதி அமைப்பாளர் திரு. எம். யோகராசா தலைமையில் நடைபெற்ற இப் பொதுக்கூட்டத்தில் திரு. வாசுதேவா தொடர்ந்து பேசுகையில்:

"திருகோணமலை மாவட்டத்தில் 1953ம் ஆண்டு 15,296 சிங்கள மக்களும், 37,517 தமிழ் மக்களும் இருந்தனர். 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 81ம் ஆண்டு டிசம்பரில் 86,341 சிங்களமக்களும், 86,743 தமிழ் மக்களும் இருந்தனர். இன்று அநுராதபுர மாவட்டத்துடன் இருந்த 5 கிராமசேவை அலுவலர் பிரிவுகளைத் திருகோணமலையுடன் இணைத்ததினால் மேலும் 11ஆயிரம் சிங்களவர்களும், 6 ஆயிரம் தமிழர்களும் சேர்க்கப்படுகின்றனர். இதன் மூலம் இம் மாவட்டத்தில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்களவர்கள் தமிழர்களைவிட மேலதிகமாக உள்ளனர். இன்று திருகோணமலை மாவட்டம் சிங்கள இனத்தைப் பெரும்பான்மையாகக்கொண்ட மாவட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ்ஈழத்தின் தலைநகரை சிங்கள இனத்தைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டமாகமாற்ற வேண்டுமென்ற ஸ்ரீ லங்கா அரசுகளின் திட்டமிட்ட நடவடிக்கைகள் பலித்திருக்கின்றன,' என்றார்.

வன்முறைகளில் இளைஞர்கள் செல்வதற்குக் காரணம் இளைஞர்களைச் சரியான வழியில் நடாத்தாமையும், இளைஞர்களிடையே அரசியல் தெளிவின்மையும் தலைமைத்துவத்தின் சரியான வழிகாட்டல் இன்மையுமாகும் என்றும் திரு. வாசுதேவா சொன்னார். [அ]

# ஆபாச திரைப்படம் காட்டினராம்

## ஒருவர் கைது!

[மன்னார்]

மன்னாரில் வீடியோ மூலம் ஆபாசத்திரைப்படம் காட்டிய ஒருவர் பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

மன்னார் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சி. யோகமாரனுக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சப் இன்ஸ்பெக்டர். திரு. லூட் வேட், சார்ஜன்ட் எஸ். பரமநாதன் ஆகியோர் அடங்கிய பொலிஸ் கோஷ்டி ஒன்று மன்னார் கொன்வென்ற் வீதியில் உள்ள வீட்டில் ஆபாசப்படத்தைக் காண்பித்ததாகக் கூறப்படும் செல்லத்துரை செல்வராசாவைக்கைது செய்ததுடன் வீடியோ உபகரணங்களையும் கைப்பற்றியது. (இ)

# "இரத்த வெள்ளத்தில் தந்தை கிடந்தார்"

## அல்லாரை கொலைவழக்கில் மகள் சாட்சியம்

[சாவகச்சேரி]

காலமானவர் எனது தந்தையார் சம்பவதினம் நான் வீட்டிலிருக்கும் போது [கார்த்திகேசு வீட்டில் எனது தந்தையாரை வெட்டிப்போட்டுக் கிடப்பதாகத் தகவல் கிடைத்தது. நான் உடனே சம்பவ இடத்திற்கு விரைந்தேன். அப்போது கார்த்திகேசு வீட்டு முற்றத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்

அல்லாரைக் கொலை வழக்கில் சாட்சியமளிக்கும்போது சுப்பன் இராசையா மேற்கண்டவாறு கூறினர்.

இவ் வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 81 ஏப்ரல் 28ல் அல்லாரையைச் சேர்ந்த சின்னவன் பூபாலசிங்கம் அல்லது இராசதுரை, சின்னவன் சந்திரன், என்பவர்கள் அதே இடத்தைச் சேர்ந்த வல்லி சுப்பன் என்பவரைப் பாளைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தர்மரத்தினமும் 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜராகினர்.

இறந்தவர் சார்பில் சட்டத்தரணி சீ. பாலக்கிருஷ்ணர் சார்ஜன் வி. செல்லையாவின் உதவியுடன் ஆஜராகினர்.

தொடர்ந்து சுப்பன் இராசையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது அங்கே எனது தாயாரைக் கண்டேன். பின் சொற்ப நேரத்தில் எனது சகோதரியைக் கண்டேன் எனது தகப்பனுருக்கு ஊரிலே பகைவர்கள் இல்லை. இவ்வழக்கில்குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கும் எங்களுக்குமிடையே எந்தவித உறவுமில்லை. எனக்குத் தந்தையார் இறந்த செய்தியை அப்பையா என்பவர் தான் வந்து சொன்னர். இதைப்பற்றிச் சாவகச்சேரிப் பொலிசாருக்கு ஒரு வாக்கு மூலமளித்துள்ளேன்.

2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி தான் முதலில் கண்டது தனது தாயாரையும் அடுத்தாப்போல் தனது சகோதரியையும் கண்டதாகக் கூறினர்.

இதைத் தொடர்ந்து காலமான சுப்பன் மகள் வசந்தமலர் சாட்சியமளிக்கையில் தான் சம்பவதினம் சகோதரி வீட்டில் நின்றதாகவும் தனது சகோதரன் வந்து தகப்பனுரைக் கார்த்திகேசு வீட்டில் வெட்டிப்போட்டுக் கிடப்பதாக யாரோ சொன்னர்கள் என்று கூறியதாகவும் தான் அவ்விடத்திற்கு ஓடிச்சென்ற பொழுது, தந்தை இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும் தான் அவரைப் பார்த்ததும் அறிவுகெட்டு விழுந்ததாகவும் அங்கு நடந்ததைப்பற்றிப் பின் தனக்கு ஒன்றும் தெரியாதெனவும் கூறினர்.

நீதிபதி எம். எச். காரியப்பர் விசாரணையை செப்ரம்பர் 1ம் திகதிவரை ஒத்திவைத்தார். (க)

## கிளிநொச்சி கொலை வழக்கு:

# நீதிமன்றம் வராத இரு சாட்சிகளுக்கு பிடி ஆணை!

(கிளிநோச்சி)

கிளிநொச்சி 4ம் வாய்க்கால் கொலைவழக்கில் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு வராத சாட்சிகள் இருவருக்கு கிளிநொச்சி நீதவான் திரு அ. ஜெகசோதி பிடி ஆணை பிறப்பித்தார்.

இவ்வழக்கில் 1982 ஜனவரி மாதம் கணபதிப்பிள்ளை வேலு என்பவரை பொல்லால் அடித்து கொலை செய்ததாக செல்லையா சபாரத்தினம் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோ சாட்சிகளான லோகநாதர் லெட்சுமி, முத்தையா லோகநாதர் ஆகிய இருவரும் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு வராததை கவனத்தில் எடுத்த நீதவான் சாட்சிகள் இருவருக்கும்பிடி ஆணைபிறப்பித்தார். (க)


## ஹோம் பினன்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான
**ORION-12"** (T. V. BLACK and WHITE)
விற்பனை செய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்
எம்மிடம் உள்ள அவசர தேவையான
மற்றைய பொருட்கள்
HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN,
PHOENIX CYCLES - மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

தலைமை காரியாலயம்:
ஹோம் பினன்ஸ் லிமிட்
இல. 463, காலி வீதி,
கொழும்பு—3
தொலைபேசி;58910

கிளை காரியாலயம்:
ஹோம் பினன்ஸ் லிமிட்
இல. 82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8310


## சம்மாந்துறைப்

# பொலிஸ் நிலையம் மீது பொதுமக்கள் தாக்குதல்

(கொழும்பு)

சம்மாந்துறைப் பொலிஸ் நிலையம் கற்களாலும், போத்தல்களாலும் தாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பொலிஸார் கண்ணீர்ப்புகை; குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர். கடந்த வெள்ளிக்கிழமைநடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறைப் பகுதியில் இளைஞர்கள் சூதாடுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் கோஷ்டி ஒன்று அங்கு சென்று சூதாடியவர்களைக் கைதுசெய்ய முற்பட்டபோது பிரஸ்தாபவீட்டிலிருந்த ஒரு சிறுமியின் கை முறிந்ததாகவும், இதனால்ஆத்திரமடைந்த மக்கள்,பொலிஸ் நிலையத்தை நோக்கிக்கற்களையும் போத்தல்களையும் வீசியதாகவும் தெரிகிறது. இச்சம்பவம் பற்றி விசாரணை நடைபெறுகிறது. [ம-க]

# சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 02 C 0460 | 04 C 0942 |
| 06 C 0446 | 06 C 0510 |
| 18 C 0851 | 01 D 0220 |
| 05 D 0453 | 06 D 0732 |
| 08 D 0973 | 09 D 0713 |
| 16 D 0806 | 17 D 0772 |
| 23 D 0808 | 02 E 0767 |
| 09 E 0328 | 02 E 0117 |
| 17 E 0223 | 12 F 0425 |
| 01 G 0698 | 04 G 0261 |
| 04 G 0799 | 10 G 0677 |
| 20 G 0541 | 21 G 0989 |
| 22 G 0415 | 10 H 0353 |
| 13 H 0157 | 01 J 0753 |
| 20 J 0636 | 06 K 0793 |
| 07 K 0981 | 24 K 0612 |
| 11 L 0870 | 18 M 0065 |
| 23 M 0841 | 05 N 0529 |
| 08 N 0761 | 21 N 0871 |
| 05 O 0126 | 06 O 0116 |
| 08 O 0787 | 22 O 0524 |
| 01 P 0564 | 11 P 0633 |
| 17 P 0707 | 17 P 0981 |
| 23 P 0252 | 14 Q 0186 |
| 17 Q 0364 | 01 R 0506 |
| 09 R 0003 | 10 R 0865 |
| 11 R 0345 | 20 R 0314 |
| 22 S 0257 | 02 T 0546 |
| 07 T 0143 | 08 T 0589 |
| 03 T 0637 | 05 T 0636 |
| 05 T 0965 | |
| 24 T 0725 | 03 U 0521 |
| 11 U 0216 | 16 U 0168 |
| 16 U 0340 | 20 U 0175 |
| 06 V 0909 | 11 V 0251 |
| 02 W 0631 | 03 W 0871 |
| 05 W 0357 | 09 W 0585 |
| 19 W 0996 | 04 X 0670 |
| 14 X 0279 | 21 X 0684 |
| 02 Y 0103 | 06 Y 033[illegible] |
| 09 Y 0544 | 05 Z 0678 |
| 08 Z 0508 | 09 Z 0378 |
| 10 Z 0950 | 15 Z 0731 |
| 06 Z 0405 | 20 Z 0680 |
| 22 Z 0095 | |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை]

# நல்லூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரெட்னம் செல்வரஞ்சன் தலைமையிலும் சாரணர்கள் திருவாளர்கள் ஏகாம்பர நாதன் இராசு ஆகியோர் தலைமையிலும் கடமை புரிகின்றனர்கள். கொடியேற்ற வைபவத்தில் வழமைபோல் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# ரயில்முன் பாய்ந்து தற்கொலை

[வவனியா]

60 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் ரயில்முன் பாய்ந்து தற்கொலைசெய்து கொண்டார்.

கொழும்பு-யாழ். கடுகதி புகையிரதத்தின் முன்பு வவனியா மூன்றுமுறிப்பு என்னும் இடத்திலேயே இனம் தெரியாத இந்நபர் ரயில்முன்பாய்ந்தார்,

இதுபற்றி ரயில் சாரதி திரு. டி.வலிசிங்கா சாட்சியம் அளிக்கையில் 156 மைல்கல்லை புகையிரதம் அண்மித்தபோது ரயில் பாதையில் ஒருவர் தலையில் முக்காடு போட்டவண்ணம் தண்டவாளத்தில் இருப்பதைக்கண்டேன். பல நிமிடங்கள் 'ஹோர்ன்' அடித்தேன். ரயிலை நிற்பாட்டக்கூடிய சூழ்நிலைஏற்படவில்லை என தெரிவித்தார்.

பிரேத பரிசோதனையை வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சோ. நிரஞ்சன் நடத்தினர்.

சாரதி,காட் ஆகிய இருவரினதும் சாட்சிகளைப் பதிவுசெய்த மரணவிசாரணை அதிகாரி டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (இ)

# 9 பேர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும் கலந்து கொண்டனர் இம்மகாநாட்டில் கோஷ்டிக் கலவரம் நடைபெற்ற பகுதியைச்சேர்ந்த 9பேர் கொண்ட விழிப்புக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. தொடர்ந்து பொலிஸ் கண்காணிப்பும் நடைபெறும்.

# நேபாள மன்னர் சீன விஜயம்

காத்மென்ட், ஜூலை 25

நேபாள மன்னர் பிரேந்திரா நாளை சீனவிற்கு விஜயம் செய்யவுள்ளார். இவர் அங்கு சீனப் பிரதம மந்திரியை சந்தித்து சர்வதேச உறவுகள் குறித்து கலந்துரையாடுவார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram 'Eelanadu' T'phone: 389 and 8126.